PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூபா 15.00
REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

25-10-2009 PAATHUKAVALAN

மலர்: 133 இதழ்: 20 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

# கத்தோலிக்க ஆயர்களின் ஜனாதிபதியுடனான சந்திப்பு



14.10.2009 அனைத்து கத்தோலிக்க ஆயர்களும் ஜனாதிபதியுடனான ஓர் சந்திப்பு நடைபெற்றது. இதன் முக்கிய நோக்கம் திருச்சபையின் அனைத்து பிரச்சனைகளையும் எடுத்துக் கூறுவதும், நாட்டின் அனைத்து பிரச்சனைகளையும் பற்றி கலந்து ஆலோசிக்கும் கூட்டமாகவும் இருந்தது. ஜனாதிபதியின் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வடக்குக் கிழக்கைச் சேர்ந்த ஆளுநர்களும், கல்வி அமைச்சர், ஏனைய துறை சார் செயலர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அதி. வந்தனைக்குரிய வியான்னி பெர்னாந்து ஆண்டகை, இச் சந்தர்ப்பத்தை வழங்கிய ஜனாதிபதிக்கு நன்றி கூறி பின்வரும் விடையங்கள் பற்றி பேசப்பட்டன.

01. யுத்தத்தினால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்கள் அதிவிரைவில் தமது சொந்த இல்லிடங்களுக்கு அனுப்பவேண்டிய அவசிய தேவை வலியுறுத்தப்பட்டது. வந்தனைக்குரிய ஆயர்கள் தோமஸ் சவுந்தரநாயகம், இராயப்பு யோசப் அவர்களும் அகதிகள் மீளக்குடியமர்த்தக்கூடிய இடங்களை சுற்றிக் காட்டி, கண்ணிவெடிகளை அகற்றி இராணுவ உதவியுடன் மக்களை குடியமர்த்தும்படி கேட்டுக்கொண்டார். இவ்விதமாக விடத்தல்தீவு தொடக்கம் பூநகரி வரையும், யாழ் வடமராட்சி கிழக்கு கரையோர பகுதிகளிலும் குடியேற்றம் செய்ய முடியும் என எடுத்துரைத்தார். அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், மன வளர்ச்சி குன்றிய சிறுவர்கள் முதியவர்கள் போன்றவர்களை பராமரிப்பதற்கு ஒரு கிராமம் ஏற்படுத்தப்படவேண்டும். இன்னும் வடக்கிலும், கிழக்கிலும் முன்னேற்ற முயற்சிகள் நடைபெறும் தருணத்தில் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் களையப்பட்டு அவர்களும் இந்நாட்டு மக்களாக சம உரிமைகள் வழங்கப்பட்டு வழிசமைக்கப்பட வேண்டும். இதற்காக வட்ட மகாநாடு நிர்மானங்களையாவது (APRC) உடனடியாக செயல்ப்படுத்த வேண்டும் என அதிமேற்றானியார் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகை முன் வைத்தார். இவற்றுக்கு செவிமடுத்த ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை.

02. அடுத்ததாக கத்தோலிக்க பிள்ளைகள் பாடசாலைகளில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் சில அதி. வந்தனைக்குரிய சிலாப ஆயர் வலன்ஸ் மெண்டிஸ் அவர்களால் முன்வைக்கப்பட்டது. கத்தோலிக்க பாடசாலைகளில் சமயத்தை போதிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லாமையும், கல்விக் கல்லூரியில் ஒரு சிறு தொகையினரே ஆசிரியப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டது. இன்னும் அரசினர் பாடசாலையில் கத்தோலிக்க மாணவர்கள் அனுமதிப்பதில் ஏற்படும் தொல்லைகளும் அங்கு சமயப் பாடசாலைகள் நடாத்தாமையும் சுட்டிக்காட்டப்பட்டது. அங்கு பிரசன்னமாக இருந்த கல்வி அமைச்சர் ஜனாதிபதியின் பணிப்பின் படி மேற்கூறிய பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும் என உறுதிகூறினார்.

03. வேறு விடையங்களையும் பற்றி கலந்தாலோசித்த போது அண்மையில் திறந்துவைக்கப்பட்ட A9 பாதைக்காக யாழ் ஆயர் நன்றியைத்தெரிவித்தார். இப்பாதை வழியாக பாரஊர்திகள் யாழ் பிரதேசத்திற்கு தேவையான பொருட்களை இலகுவாக கொண்டு வருவதும், யாழ்ப்பாணத்தின் உற்பத்திப் பொருட்களை கொழும்புக்கு எடுத்துச்செல்வதும் சிறப்பாக நடைபெறுவதை சுட்டிக்காட்டி அதே வேளை தனியார்களும் தம் சொந்த வாகனங்கள் மூலம் செல்ல இப்பாதையை பயன்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

04. திருப்பலிப்பூசைக்கு பயன்படுத்தப்படும் முந்திரிகை இரசம்



அதி உயர் வரி விதிக்கப்படாமல் இலகுவாக கிடைப்பதற்கு வழி செய்ய கேட்டுக்கொண்டார். இறுதியாக நீண்ட காலமாக இடம் பெற்ற மக்களுக்கான நிவாரண பொருட்களுடன் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் ''வணங்கா மண்'' பொருட்கள் இறக்கப்பட்டு மக்களுக்கு வினியோகிக்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு திருகோணமலை துணை ஆயர் அதிவந்தனைக்குரிய ஜோசப் பொன்னையா ஆண்டகை வெள்ளியால் செய்யப்பட்ட மடு ஆலயத்தின் பிரதி அமைப்பு ஒன்றை ஜனாதிபதி அவர்களுக்கு கையளித்ததோடு இச் சந்திப்பு இனிதே முடிவுற்றது.

## அனைத்துலக குருக்கள் கருத்தரங்கு



அனைத்துலக குருக்கள் ஆண்டின் நிறைவை ஒட்டி உரோம் நகரில் 2010 ஆம் ஆண்டு 9-11 ஜுன் மாதம் வரை குருக்களுக்கான அனைத்துலக கருத்தரங்கு நடைபெறும் என்று திருபீட குருக்கள் பேராயம் அறிவித்துள்ளது. உரோம் புனித பசிலிக்காவில் 9 ஜுன் அன்று தொடங்கும் இச்சர்வதேச கருத்தரங்கு **கிறிஸ்துவின் பிரமாணிக்கம், குருக்களின் பிரமாணிக்கம்** என்ற தலைப்பில் நடைபெறும் என்றும் அப்பேராயம் அறிவித்துள்ளது.

## மன்னார் சிறிய குருமட அதிபர் யாழ் சிறிய குருமடத்திற்கு விஜயம்

மன்னார் மருதமடு அன்னை சிறிய குருமட அதிபர் அருட்பணி. சேவியர் குருஸ் அடிகளார் யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திற்கு வருகை தந்தார்.

மன்னார் சிறிய குருமட அதிபர் அருட்பணி. சேவியர் குருஸ் அடிகளார் ஒக்டோபர் 19ம் திகதி புனித. மடுத்தீனார் குருமட மாணவர்களை சந்தித்தார். இவர் தமது சந்திப்பின் போது சிறிய குருமடம் அம் மறைமாவட்டத்தின் இதயமாக விளங்குகிறது. சிறிய குருமடத்தின் உருவாக்கலின் முக்கிய நோக்கம் நல்ல குருக்களை உருவாக்குவதும் சிறந்த மனித பண்புகளை வளர்த்து கல்வியில் முன்னேற்றமும் ஆன்மீகத்தில் வளர்ச்சியும்அடைவதாகும்.

1970ஆம் ஆண்டு தொடக்கம் 1977 ஆம் ஆண்டு வரையிலாக புனித மடுத்தீனார் குருமடத்தின் அதிபராக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. இவர் மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வராக நீண்ட காலம் பணியாற்றினார் என்பது ஓர் சிறப்பான அம்சமாகும்.

## நீங்கள் ஆயத்தமா...

இவ்வருடமும் உங்கள் சிறந்த ஆக்கங்களால் கிறிஸ்துவின் பிறப்போடு வரவிருக்கும் காவலன் பத்திரிகையை அழகுபடுத்தி சிறப்பிக்க உடன் உங்கள் கவிதை, கட்டுரை, சிந்தனை என்பவற்றை எமக்கு அனுப்பி வைத்து, தற்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு கிறிஸ்துவின் பிறப்பு அர்த்தம் பெறக்கூடிய வகையில் சிந்தனைகளை அனுப்பி வைக்கவும்.

உங்கள் ஆக்கங்களை நவம்பர் மாதம் 30ம் திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடிய விதமாக அனுப்பி வைக்கவும்.

## கனடாவில் தொடர் திருச்செபமாலை

கனடா ரொறோண்டோவில் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் ஐப்பசி மாதம் 3ம்திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் தொடர் செபமாலை வழிபாடு அங்கு வாழும் கத்தோலிக்கர்களால் முன்னெடுக்கப்பட்டது. இவ் தொடர் செபமாலை எமது நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காகவும், இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு செல்லவேண்டும் என்ற விண்ணப்பத்தை முன்வைத்து இத்தொடர் செபமாலை நடைபெற்றது. இவ்வழிபாடு கத்தோலிக்க ஆன்மீக இயக்குனர் அருட்பணி. கபிரியேல் அருள்நேசன் அடிகளாரினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

## வாழ்த்துக்கள்

### அருட்பணி. ம. றெக்ஸ் சவுந்தராவின் எத்துணை அருமையானது ஒலி, ஒளி இறுவெட்டு வெளியீடு

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர். ம. றெக்ஸ் சவுந்தரா அடிகள் எத்துணை அருமையானது என்ற ஒலி ஒளி இறுவெட்டு ஒன்றினை வெளியிடவுள்ளார்.

திருப்பாடல் வரிகளுக்கு இசையமைத்து பாடித்தியானிக்க சிறந்த இக்கலைப் படைப்பு எத்துணை அருமையானது.

கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 28.10.2009 அன்று வெளியிடவுள்ள இவ்இறுவெட்டு வெளியீடு நிகழ்வுக்கு யாழ் ஆயர் மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கிறார்.

அருட்பணி. றெக்ஸ் அடிகளாரின் இசைப்பயணம் மென்மேலும் தொடர காவலனின் சிறப்பான வாழ்த்துக்களைத் தெரிவிப்பது மகிழ்ச்சி அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

## பெரியவன்

உலகில் 'பெரியவைகள்,' பிரமாண்டங்கள், வலுவானவைகள் – இவற்றுக்கே முன்னுரிமையும், மதிப்பும். இவைகளின் இராட்சத இருப்புக்களால், சிறியவைகள் மதிப்பிழந்து போகின்றன.

ஓர் அதிவேகப் புகையிரத வண்டி நகரை ஊடறுத்துக் கொண்டு தனக்கே உரிய கம்பீரத்தோடு சென்றுகொண்டிருக்கிறது. ஆங்காங்கே ரயில் கடவைகள் என்று பெயரிடப்பட்ட இடங்களில் சிற்றூர்திகள், அது போகும் வரை காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது.

புகையிரதம் போகும் இடத்துக்கே செல்ல வேண்டிய சிற்றூர்திகளும் அங்கே காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. அவை தாம் சிற்றூர்திகள் என்பதால்.

இவ்வாறு 'பெரியவைகள்' தம் இயல்பிலேயே கொண்டிருக்கின்ற ஆதிக்க சக்தியும், நாயகத் தோற்றமும், கவர்ச்சித் தன்மையும் (Hero Appearence) ஆளத் துடிக்கும் இயல்பான மனித விருப்பத்தால் இலகுவாக கவரப்பட, ஒவ்வொரு மனிதனும் தான் பெரிய வனாக விரும்புகிறான்.

இந்த விருப்பத்தின் முதல் படிதான், 'ஏதேன் தோட்டம்.' நமது முதல் பெற்றோர், எல்லாம் நிறைவாகப் பெற்றிருந்தார்கள்; வானதூதருக்கு ஒப்பாய் இருந்தனர் – அருள் நிலையில் படைக்கப்பட்டதும் அவர்களுக்குப் பெரியதாய் தெரியவில்லை – அதனால் கடவுளைப் போல் ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டனர்.

'பெரியவன்' – இது ஆதியில் தோன்றிய பாம்பு, மனிதனை வீழ்த்தத் தன் கையில் எடுத்த முதல் இரசாயன ஆயுதம்'. பின் அது நோவாவின் வாரிசுகளைத் தாக்கியது. "வாருங்கள், உலகம் முழுவதும் நாம் சிதறுண்டு போகாதபடி, வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை நமக்காகக் கட்டி எழுப்பி, நமது பெயரை நிலை நாட்டுவோம்." என்றனர். இவ்வாறு 'பாபேல் கோபுரம் மனிதனது அகங்காரத்திற்கும், தன்னாதிக்கப் போக்கிற்கும் குறியீடாய் அமைந்தது.

இந்தப் பாபேல் கோபுரம் என்ற குறியீட்டின் பின்னால் மறைந்திருக்கும், மனிதனின் கர்வமும், அதிகார வெறியும், கதிரை ஆசையும், ஆதிக்க போக்குமே 'பெரியவன்' என்ற சொல்லை – அதன் உண்மை தன்மையை களங்கப்படுத்தி விட்டது.

'அனைவர்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து' என்றார் வள்ளுவர்.

பெரியவன் என்பதன் அடையாளம் 'பணிவு' அந்த பணிவு பெரியவனுக்கு இருப்பது – செல்வந்தனுக்கு பிறிதொரு செல்வம் வந்து சேர்வது போல என்கிறது திருக்குறள்.

இதையே "ஒருவன் முதல்வனாக இருக்க விரும்பினால், அவன் அனைவரிலும் கடைசியானவனாக இருக்கட்டும்" என்கிறது பைபிள்.

ஆன்மீகம் என்பது என்ன? ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை துறந்து விடுவதே; என்கிறது இந்துமதம். 'நான்' என்ற அகங்காரத்தை ஒழித்து, இறையன்பிலும், பிறரன்பிலும் ஈடுபடுவதே ஆன்மீகம் என்கிறது கிறிஸ்தவம்.

மொத்தத்தில் 'பெரியவன்' என்கிற கருத்தியலுக்கும், ஆன்மீகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இங்கு புலப்படுகிறது.

ஒருவன் 'பெரியவான இருக்க விரும்பினால், அல்லது ஆன்மீக விடுதலை அடைய விரும்பினால், பணிவுடன், பணி செய்ய வேண்டும்.

இப் பணிவுக்கும், பணி செய்வதற்கும் ஆன்ம பலம் வேண்டும். அவை இல்லாத போதுதான் அவர்கள் நல்ல தலைவர்களாக, பெரியவர்களாக நடந்து கொள்ள முடிவதில்லை.

தன்மீதும் தனது சமூகத்தின் விழுமியங்கள் (Social values) மீதும் நம்பிக்கை இன்மையும், தளம்பல் நிலையும் உள்ள தலைவர்கள், பெரியவர்கள் தோல்வி அடைந்துவிடுகிறார்கள்.

சமூக விழுமியங்களை பொறுத்த மட்டில் அவருக்குள்ள பார்வையும், அளவுகோலும் எப்படிப்பட்டது என்பதை பொறுத்தே ஒரு தலைவன் அல்லது பெரியவன் உண்மையில் அப்பெயருக்குத் தகுதியுள்ளவன் என கணிப்பிட முடியும்.

உலக மதிப்பீடுகளின் மாயை அல்லது போலித் தன்மைகளை தேர்ந்து தெளியும் அறிவும், அப்போலிகளோடு சமரசம் செய்து கொள்ளாத உறுதியான நிலைப்பாடுகளும், துன்பப்படுபவர்கள் பக்கம் சார்ந்து நிற்கும் மனப்போக்குமே உண்மையான தலைவர்கள், பெரியவர்களின் இலக்கணம். கிறிஸ்துவின் அணுகுமுறையும், மனநிலையும் இதுவே.

# வள(னா)ர் பப்பா பதில்கள்



*1. கேள்வி : அன்புள்ள வளனாரே, ஆலயத்துக்குள்ளும் தொலைபேசி பாவனை அதிகரித்த காரணத்தினால் திருவழிபாட்டு நிலையம், (swich off the Phones and Swich on to God ) என்ற சில வாசகங்களை ஸ்ரிக்கர்களில் பதிப்பித்து ஆலயக் கதவுகளில் ஒட்டச் செய்துள்ளது. இருந்தும் ஆலயத்துள் கைத்தொலைபேசிப் பாவனை குறைந்தபாடாய் இல்லையே என்ன செய்யலாம்?*

**ராஜி, ஆனைக்கோட்டை.**

**பதில் :** இனி என்ன செய்யலாம்? பதிலுரை பாடலுக்கு பல்லவியாக Swich off the Phones and Swich on to God என்றாவது சொல்லிப் பார்க்கலாம். அதற்குப் பின்னும் சரிவரவிட்டால் விசுவாசிகள் மன்றாட்டு பதில் பாடலாகச் இதைச் சொல்லலாம். திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்றது இது தான்.

*2. கேள்வி : வளனாரே, கருணைக் கடவுளாலும் மன்னிக்கப்படாத பாவம் என்று ஏதாவது உண்டா?*

**சேவியர், உரும்பிராய்.**

**பதில் :** ஆம் கடின இதயம் (hardness of heart) என்ற பாவம். இதுதான் பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவமும் கூட. உன்னை நான் மன்னிக்க மாட்டேன், வாசற் படி மிதிக்க மாட்டேன் என்ற வார்த்தைகள் கடின இதயத்தின் வெளிப்பாடே. பரிசேயருடன் இயேசு முரண்பட காரணமும் இதுவே. இளகிப் போக மறுக்கும் மனநிலை. அதை கடவுள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார். கடவுளின் இக் கடின இதயத்திற்குக் காரணம், 'அவன் மனம்மாறித் திருந்தி வாழ வேண்டும்' என்ற அவரின் கனிவான இதயமே.

*3. கேள்வி : பப்பாவுக்கு, ஒரு சுயநலத்திலும் ஒரு பொது நலமுண்டு என்பதற்கு உதாரணம் சொல்வீர்களா?*

**மேரி சாணு, சக்கோட்டை.**

**பதில் :** மீன்கள் தம் பசியைப் போக்குவதற்காகத் தொட்டியில் உள்ள அழுக்குகளை தின்கின்றன – இது சுயநலம். மீன் தொட்டி சுத்தமாகிறது – இது பொதுநலம். (வெள்ளைக் காட்டுக்கு வேலை செய்வதும் இதை ஒத்ததே.)

*4. கேள்வி : வளனாரே, திருச்சபையில் திருமண முறிவு (divorce) சட்டம் உண்டா?*

**அன்ரனிராஜன், பருத்தித்துறை.**

**பதில் :** கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்கிறது இறை வார்த்தை. அதன்படி முறையாக, முழுமையடைந்த ஓர் திருமணம் எக்காரணம் கொண்டும் பிரிக்கப்பட முடியாது. அதாவது கத்தோலிக்க திருச்சபையில் மணமுறிவு (divoce)க்கு இடமே இல்லை. ஆனால் நடைபெற்ற திருமணம் முறையற்றதாக இருந்தால், திருச்சபை அதனை விசாரித்து, நடந்த திருமணம், ஒரு திருமணமே அல்ல (nullification) என்று அறிவிக்க மட்டுமே திருச்சபையில் இடமுண்டு. மணமுறிவுக்கு இடமில்லை.

(சரி இதை ஏன் நீர் கேட்கிறீர்? நீர் திருமணம் ஆகிவிட்டீர் போல)

*5. கேள்வி : அன்புள்ள வளனாரே, அண்மையில் நீர் படித்துச் சுவைத்த புதுக்கவிதை என்ன?*

***சுதன் நாவாந்துறை.***

**பதில் :** குழந்தைகளே
ஜாக்கிரதை!
புத்தகங்கள் உங்களை
கிழித்துவிடப்போகின்றன.

*6. கேள்வி : வளனாரே, பிற சபையில் பாவ அறிக்கை செய்வது போல் நாமும் சப்தமிட்டு கொண்டாலென்ன?*

***S. பிளின்ரன், மெலிஞ்சிமுனை.***

**பதில் :** உமது நோக்கம் என்ன? சப்தமிடுவதா? பாவ அறிக்கை செய்வதா? என்பதை முதலில் தீர்மானியும். பின் பாவ அறிக்கை தான் செய்வதென்றால், பாவ சங்கீர்த்தன தொட்டிக்கு சென்று குருவிடம் அமைதியில் உமது பாவங்களை அறிக்கையிட்டு, இறைமன்னிப்பை பெற்றுக் கொள்ளவும். சத்தமிடுவதுதான் நோக்கமென்றால் கடற்கரை மற்றும் வயல் வெளிகளுக்குச் செல்லலாம்.

# கிறிஸ்துவின் நற்செய்தியை வாழ்வாக்கிய திருக்கூட்டமே புனிதர்கள்

**அருட் சகோ. றமேஸ் அ.ம.தி.**

வரலாற்றில் உயர் நிலை எய்திய மேதைகளையும், மன்னர்களையும், தலைவர்களையும், பெரியோர்களையும் உலகம் காலப் போக்கில் மறந்துவிடுவது வெளிப்படையுண்மை. ஆனால் இவ்வுலகில் இறைச் சித்தத்தின் படி வாழ்ந்த புனிதர்களையும், அவர்களுடைய சாதனைகளையும் திருச்சபை ஒருபோதும் மறப்பதில்லை. மாறாக அவர்களை நாளும் எம்முடன் ஐக்கியப்படுத்த புனிதர்களின் சமூக உறவில் எம் விசுவாசத்தை ஆழப்படுத்த திருச்சபை தாய் தன் பிள்ளைகளை அழைத்து நிற்கிறாள். புனிதர்களின் சமூக உறவை விசுவசிப்பதன் மூலம், கிறிஸ்துவில் எங்கள் ஒவ்வொருவரினதும் அழைப்பினையும், வெற்றிவாகை சூடும் விண்ணக அரசோடு நாம் கொண்டுள்ள ஒருமைப்பாட்டையும் விளங்கிக் கொள்ள திருச்சபை எமக்கு வழிகாட்டுகிறது.

இவ்வுலகில் இறைவனது சித்தப்படி தமது வாழ்க்கையை முன் நகர்த்தி தமது வாழ்வால் கிறிஸ்துவை பிரதிபலித்து அதற்கான பரிசாக விண்ணுலக வாழ்வினை சுதந்தரித்துக் கொண்டவர்களே புனிதர்கள். கிறிஸ்துவின் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டு, அவர் போதனைக்கும் வாழ்வுக்கும் பிரமாணிக்கமாய் இருந்து அவர் அடிச்சுவடுகளை பின்பற்றி வாழ்ந்ததன் மூலமாக இவ்வரிய பேற்றினை அவர்கள் எய்துகின்றனர். கிறிஸ்து வழியாக ஒரே இறைவனில் நம்பிக்கை கொண்டு வாழும் திருக் கூட்டமே புனிதர்களின் சமூக உறவாகும். புனிதர்களின் சமூக உறவைப் பற்றிக் கூறும் புனித பவுல் "ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே திருமுழுக்கு உண்டு. எல்லாருக்கும் கடவுளும் தந்தையும் ஒருவரே. அவர் எல்லோருக்கும் மேலானவர், எல்லாரிலும் செயலாற்றுபவர், எல்லோருக்குள்ளும் இருப்பவர்" (எபே 4:5-6) என்கிறார். விண்ணகத்தில் விருது பெற்றோர், உத்தரித்து தூய்மை பெறுவோர், மண்ணகத்தில் சமர் புரிவோர் ஆகிய அனைவரும் ஒரே திருமறையின் மூவணி உறுப்பினர்களாக காட்சி தருகின்றனர். அவர்கள் எல்லோருக்கும் தலையாய் உள்ளவர் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவே. "....திருச்சபையாகிய உடலுக்குத் தலைவரும் அவரே. ஆதியானவரும் அவரே, அனைத்திலும் முதன்மை பெறும்படி இறந்தோரினின்று பிறந்த தலைப்பேறு அவரே (கொலோ1:18).

புனிதர்கள் இவ்வுலகில் இருந்த போது உலகம், அலகை, மற்றும் தீய நாட்டங்கள் இவை அனைத்தின் மீதும் வெற்றி முரசு கொட்டினர். அவர்களது வெற்றி குறித்து மண்ணகத் திருச்சபை மகிழ்கின்றது. புனிதர்கள் எல்லோரும் எங்களைப் போல பாவத்தில் பிறந்தவர்கள், பாவ நாட்டத்துடன் வாழ்ந்தவர்கள், புனித பவுல் கூறுவது போல பாவச் சோதனைக்கு உள்ளானவர்கள். விண்ணுலக இன்பத்தை இழந்துவிடும் ஆபத்து அவர்களுக்கும் இருந்தது. ஆனால் பாவ நாட்டங்கள், சோதனைகள் அனைத்துக்கும் எதிராக வீர நெஞ்சம் தாங்கி தங்கள் இறுதி மூச்சு வரை சமர் புரிந்தனர். இறைவனுடைய வார்த்தையின் வழியில் நடக்க பல்வேறுபட்ட துன்பங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் பயணித்தனர். அதன் விளைவாக அவர்கள் இன்று வானுலகில் கடவுளுடைய மாட்சிமையைக் காண்கின்றனர். புனிதர்கள் புனித நிலையை அடைவதற்கு காரணமாயிருந்த அதே வழிவகைகள் தான் எமக்கும் இருக்கின்றன. ஆனால் மீட்பின் வழிவகைகளை உரிய வகையில் பயன்படுத்தும் மனத்திடம் எங்களிடம் உள்ளதா என சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். அதேவேளை அந்த மனத திடத்தை இறைவனிடமிருந்து பெற்றுத்தர புனிதர்கள் தயாராக இருக்கிறார்கள் என்ற எண்ணம் எமக்கு ஆர்வம் ஊட்ட வேண்டும். புனிதர்களைப் பற்றி புனித யோவான் பின்வருமாறு கூறுகிறார். "யாராலும் எண்ண இயலாத பெருந்திரளான மக்களைக் கண்டேன். இவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும்,

(7ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## சிறுவர் நாமே நாளைய சமுதாயத் தலைவர்கள்

கனவுகளைச் சுமந்து காலனைவிரட்ட
இலட்சியத்தை நோக்கி வீறுநடைபோட்டு
மாணவர் எனும் பெயரை மனங்களில்
ஏற்றிய நாம் முன்னேறத் துடிக்கின்றோம்
கல்வியினைக் கற்று - ஏனெனில்
சிறுவர் நாமே நாளைய சமுதாய தலைவர்கள்

சிறுவர்கள் அன்புடனே
ஆதரிக்கப்படுவதற்கு அன்பு நிறைந்த
வாழ்வை அனைவர்க்கும் வழங்கிடுவீர்
ஆரோக்கியமாய் போசாக்குடன்
வாழ்வதற்கு அனுதினமும் சிறந்த
உணவை அனைவர்க்கும் வழங்கிடுவீர்
சிறுவர்நாமே நாளைய தலைவர்கள்

இனிவரும் புது உலகை இன்பமாய்ப் படைத்திடவே
இனிதாய் மலரவே எமக்கு தந்திடுவீர்
எம் வாழ்வை விளக்கேற்ற
உன்னதப் பெரியோரே உதவிடுவீர்
எமக்கு நாமே நாளைய தலைவர்கள்

S. பிரின்ரன்
மெலிஞ்சிமுனை.

அம்மா : ஏண்டா! அவள் எப்பப் பார்த்தாலும் கண்ணைக் கசக்கிக் கொண்டே இருக்காளே, கண் டாக்டர் கிட்டே அழைச்சிண்டு போயேண்டா...!

பிள்ளை : வேண்டாம்மா! ஒருநாள் நகைக் கடைக்கு அழைச்சிண்டு போனால் சரியாப் போயிடும்...!



## யாரிடம் செல்வேன்...

வாழப் பிறந்தேன்
வாழத் துடித்தேன் - அதை
வாழ முடியவில்லையே
எப்படித்தான் வாழ்வது?...

இலட்சியங்கள் பல மனத்திரையில்;
பயணிப்பது ஓர் இலக்கில்
நீண்ட பயணம்
நிலைத்திருக்க முடியவில்லை
எப்படித்தான் பயணிப்பது?...

சாதிப்பதற்கு அல்ல
வாழத்தான் துடிக்கிறேன்
முட்டி மோதுகின்றன சவால்கள்
இது சாக்குப் போக்கு அல்ல
எப்படித்தான் வாழ்வது?...
ஆசை என்ற அடங்காப்பிடாரி
ஆட்டிப் படைக்கிறது
அலைந்து திரிகிறேன்
அரவணைப்பார் யாருமின்றி
எப்படித்தான் வாழ்வது?...

"நம்பிக்கை என்ற ஒன்றை
மட்டும் கைவிடாதீர்" என்ற
இயேசுபிரான் வார்த்தையிலே
உறுதி கொண்டு
தொடர்கிறேன் பயணமதை....

கெ. இரோன், யாழ்ப்பாணம்.

## கல்லறை உறவுகள்...

நாங்களும் உயிர்வாழ
ஆசைப்படுவதுண்டு
ஆனாலும் முடியவில்லை
நடமாட ஆசை உண்டு
ஆனாலும் கால்கள் இல்லை
எதைத்தான் நாம் எண்ணி
இறந்தோமோ எமக்கு - நினைவில்லை

உருவம் இல்லை எமக்கு
அதனால் நாம் தெரிவதில்லை
ஆனால் எம் உறவுகளை
உற்ற நண்பர்களை, தினம் பார்க்கின்றோம்
ஆனாலும் அவர்கள் எங்களை காண்பதில்லை
பேச ஆசையுண்டு ஆனாலும் வாயில்லை எமக்கு

உங்கள் நினைவுகளின் முன்
தினம் நிழலாய் நிற்கின்றோம்
என் தோழர்களுடன் தோழனாய்
உரு இழந்து நிற்கின்றோம்
எம் கல்லறைக்கு பூத்தூவும்
கார்த்திகை இரண்டில் - நாங்கள்
உங்களைக் காண்கின்றோம்
ஆனாலும் நீங்கள் எம்மை என்றும் மறவாதீர்கள்.

M. ஜெயராட், நெடுந்தீவு

## தரவலன் கண்மணிகள்

### ஞானஒளி வீசுகின்ற நந்தவன பூஞ்சுடரே

ஞானஒளி வீசுகின்ற நந்தவனப் பூஞ்சுடரே
வானவரன் நல்லருளை நாம்சுவைக்க வரமாவீர்

அருட்பணி ஊழியர் ஆன்மீகக் காவலர்
திருப்பலி புரிந்திடத் திருப்பலம் உமதே

தன்னலம் துறந்த தவயோக ஞானிகள்
உம்பலம் ஏந்தியே திவ்வியம் பேசுவர்

வாய்மை தூய்மை காக்கும் சீடர்களில்
தீமைகள் தீண்டாது திருக்கண் நோக்கும்

திருமறை வாக்கில் புதுவளம் கொடுக்க
திருக்கர ஆசிகள் தினமும் ஊற்றுவீர்

பாவிகள் எமக்காய் பரிந்து பேசுவர்
ஆவியின் ஒளியில் அவர்களை இணைப்பீர்

சுஞ்சலச் சூழலில் அஞ்சிடும் வேளையில்
தஞ்சக் குரலினை காப்பீர் திருவே

குருத்துவ மருத்துவர் குணம்தர வல்லவர
திருப்பதம் பணியத் திருவரம் அருள்வீர்

திருக்குறள் எங்கும் தேடிச் சென்று
பக்தியைப் பெருக்கப் பரிவுளம் சேரும்

சிதறிய மந்தைகள் சிறப்புடன் மகிழ
பதறிய சீடர்க்குப் பக்குவம் கூறும்

அங்கம் இழந்து அவலம் தாங்கிப்
பங்கம் சுமப்போரில் பரிசுத்தம் வீசும்

ஞா. அரியமலர், மிருசுவில்

# உள்மனக் காயங்கள் உங்களை வருத்துகின்றனவா?

**- அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம் -**

முப்பது வருடப் போரின் விளைவாக என்றுமில்லாதவாறு பலர் தமது உடல் உறுப்புக்களை இழந்தது மட்டுமல்லாமல், உள்மனக்காயங்களோடும் உழுன்று கொண்டிருக்கின்றனர். அத்துடன் வாழ்கையின் பல்வேறு காலகட்டங்களில் பிறரது மனதில் காயங்கள் ஏற்பட்டு இருக்கலாம். இவை இன்றும் மாறாத மனவடுக்களாக மனதிற்கு வேதனையளித்துக் கொண்டிருக்கும். இங்கு தரப்படுகின்ற சிறிய பயிற்சி அத்தகைய நபர்கள் உளமனக் காயங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஒரு வழிகாட்டியாக அமையும். இதன் முழுப்பயனையும் பெறவேண்டுமானால் இதனை ஒரே முறையில் வாசிப்பது நல்லதல்ல. இது ஒரு பயிற்சி. எனவே ஒவ்வொரு நிலையையும் ஆறுதலாக வாசித்துப் பயிற்ச்சி செய்யும் போது உங்கள் உள்மனம் காயங்களிலிருந்து விடுதலை பெற வழிபிறக்கும். குணமளிக்கும் வல்ல தேவன் உங்களைத்தொட்டு குணப்படுத்துவாராக.

01. பல்வேறு நபர்களால் உங்களுக்கு ஏற்பட்ட மிகுந்த வேதனை தரும் அனுபவங்களை நினைவுக்குக் கொண்டுவரவும். அவற்றுள் இபபொழுதும் உங்களுக்கு வேதனை தருபவற்றை அல்லது நீங்கள் தீர்க்க விரும்புகிறவற்றைக் குறித்துக் கொள்ளவும்.

02. இவற்றுள் உங்களுக்கு மிகுந்த மன வேதனை தந்த ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். அது உங்கள் வாழ்கையில் நடைபெற்ற சந்தர்ப்பத்தை நினைவுக்கு கொண்டு வரவும். அதன் பின் அந்தச் சம்பவம் உங்களுக்கு மீண்டும் நிகழ்வது போல கூடியளவு முனைப்பாக அதை உணந்து கொள்ளவும். நிகழ்தவற்றை மட்டுமல்லாது உங்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைவும் கவனத்திற் கொள்ளவும். இந்த உணர்ச்சிகள் உங்களுக்கு ஏற்ப்படக் காரணம் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

03. இப்போது உங்களைக் காயப்படுத்திய அந்த நபர் உங்கள் முன்னிலையில் இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். அவரோடு ஓர் உரையாடலை ஆரம்பியுங்கள்.

"நீங்கள் என்னை மிகவும் காயப்படுத்தி விட்டீர்..." உரையாடல் தொடரட்டும். தொடந்து எழுதுங்கள், கடினப்பட வேண்டாம். அந்த நபர் தனது பக்கத்து நியாயங்களை விளக்குவதற்கு சந்தர்ப்பமளியுங்கள். அவரது பேச்சைக் கவனமாக செவிமடுங்கள். உரையாடலின் போது அவரது உணர்ச்சிகளையும் உங்களது உணர்ச்சிகளையும் அவதானியுங்கள். அதையும் எழுதிக்கொள்ளுங்கள்.

04. உங்களது உடலைத் தளர்த்திக் கொள்ளுங்கள். திரும்பிப்பார்க்கும் போது, எனக்கு ஏற்பட்ட காயம் ஒரு மறைமுகமான ஆசீர்வாதமாய் இருக்கக்கூடுமா? அது எனக்கு ஏதாவது ஒரு நல்லறிவைத் தந்துள்ளதா? என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். அதையும் எழுதிக்கொள்ளுங்கள். இந்த சிந்தனைகள் உங்கள் மனதில் ஆழமாக பதிய விடுங்கள்.

05. ஆண்டவர் முன்னிலையில் உங்களை நிறுத்தி, உங்கள் மனக்காயத்தைப் பற்றி அவருக்குக் கூறுங்கள். உங்களைக் குணமாக்கி, காயப்படுத்தியவரை மன்னிக்கும் பக்குவத்தைத் தருமாறு அவரிடம் வேண்டுங்கள். உங்களை காயப்படுத்திய நபருக்காக மன்றாடுங்கள். சிலுவையில் இயேசு தன்னைத் துன்புறுத்தியவர்களுக்காகப் பரிந்துபேசியது போல அவருக்காக பரிந்து பேசுங்கள். இது சுலபமானதொன்றல்ல. ஆனால தொடந்து முயச்சி செய்யுங்கள். இதையும் உங்கள் ஏட்டில் குறித்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெற்றுக்கொண்ட ஞானத்திற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்.

( இதையும் எழுதுங்கள்.) உங்கள் மனதில் பாரம் குறைந்திருப்பதாக உணர்வீர்கள்.

06. உங்களுக்கு ஏற்பட்ட ஏனைய அனுபவங்களிலும் குணவடைவதற்கு இதே முறையைக் (2-5) கையாளவும்.

07. இறுதியில் சிலுவையடியிலிருந்து மென்மேலும் இயேசுவைப் போல் உங்களை மாற்றியருளுமாறு இயேசுவிடம் மன்றாடுங்கள்.

# ஏலி, ஏலி, லெமா சபக்தானி

**- அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் -**





★ "நான் என்ன பாவம் செய்தனான். ஏன் எனக்கு இந்த வருத்தம்?"
★ "நான் யாருக்கு அநியாயம் செய்தனான். ஏன் எனக்கு இப்பிடி அநியாயம் செய்யினம்."
★ "கடவுளிலை நான் இவ்வளவு அன்பாயிருக்கக் கடவுள் ஏன் என்னை இப்பிடிச் சோதிக்கிறார்?."
★ "நான் ஒருதருக்கும் தீமை நினைக்கிறேலை. எனக்கேன் இவ்வளவு துன்பம்?"
★ அநியாயம் செய்யிறாக்கள் நல்லாயிருக்கினம். கடவுள் கடவுள் என்று கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கிற எங்களுக்குத்தான் எப்பவும் துன்பம்!?"

வேதனையின் உச்சத்தில் பலர் உகுக்கும் வார்த்தைகள் இவைதான் இன்னும் இத்தகைய கேள்விகள் பல. இவற்றுக்குப் பதில் தெரியாததால் கடவுளின் அன்பையும் இருப்பையும் சந்தேகிப்போர், அவரைக் கைகழுவி விடுவோர், அவர்மீது வெறுப்புக் கொள்வோர், அவரைத் திட்டுவோர்...... எனப் பலர்.

"இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் தீமையான எதற்கும் அஞ்சேன்" என்று கூறுகின்றது திருப்பாடல். இவ்வாறு தன்னை அன்பு செய்வோரை நம்புவோரைக் இறைவன் கைவிடாதவர், அவர்களைத் தீமையில் நின்று காப்பவரென வேதாகமம் பல இடங்களில் கூறி நிற்கின்றது. ஆனால் உண்மை அதுவா?. "நான் தனியாக இல்லை. என் தந்தை என்னோடு இருக்கின்றார்." என்று இயேசு தானே கூறியிருக்கின்றார். ஆனால் அவர் வாழ்வில் நடந்தது என்ன?

கடவுள் தான் அன்பு செய்கின்றவர்களைக் கைவிடமாட்டாரென வேதாகமம் பல இடங்களில் கூறியிருந்தாலும் அவர் கைவிடுகின்ற கடவுள் என்பதற்கும் நிறையச் சான்றுகள் உண்டு. எம் வாழ்வில் அவர் கைவிடுகின்றவர் என்பதைத் தான் அடிக்கடி அனுபவிக்கின்றோம். இதுதான் அன்றாட யதார்த்தம்.

### சொந்த மகனைக் கைவிட்ட அப்பா

இறைவன் தன் ஒரே மகன் இயேசுவையே கைவிட்டவர் என்பது தான் உண்மை. "என் இறைவா, என்னிறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று துன்பத்தின் உச்சத்தில் சிலுவையிலிருந்து உரத்த குரலில் கத்தியழுதது பல தொடர் அனுபவங்களின் உச்சம். கடவுள் கைவிட்ட அனுபவங்களின் ஒட்டுமொத்தக் குரல் அது. பாவம் எதுவும் செய்யாத அவரைப் பைத்தியம் பிடித்துவிட்டவர், பேய்பிடித்தவர், பெயல்சபேலைக் கொண்டு பேய்களை ஓட்டுகின்றவர், பிரபல்யத்தை விரும்புபவர், உணவுப் பிரியன், கட்டளைகளைக் கடைப்பிடிக்காதவர்... என்று பலவாறு குற்றம் சாட்ட அனுமதித்தவர்தான் அவரது அன்பு அப்பா. குற்றம் ஏதும் செய்யாத போதும் பொய்க் குற்றச்சாட்டுகள் சோடிக்கப்பட்டு மரணத் தீர்ப்புப் பெறும்போது மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தவர்தான் அந்த அப்பா. கொடும் வதைக்கு உள்ளாக்கப்பட்டு, சிலுவையில் ஆணியால் அறையப்பட்டுக் குருதி பீறிட்டுப் பாய்ந்து களைப்போடும் தாகத்தோடும் இறக்க பார்த்துக்கொண்டு கைகட்டி நின்றவர்தான் இயேசுவின் அப்பா. இதை நாங்கள் எளிதில் மறந்து விடுகின்றோம் அல்லது பார்க்க மறுக்கின்றோம்.

(7ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருக்கள் ஆண்டு ஜூன் 2009 - ஜூன் 2010



# சாதாரண மனிதர்களை வேறுபடுத்திக் காட்டும் ஆண்டவரின் அழைப்பு

கடவுள் தந்த அழகிய வாழ்வு
உலகம் முழுதும் அவனது வீடு
கண்கள் மூடியே வாழ்த்துப் பாடு
கருணை பொங்கும் உள்ளங்கள் உண்டு
கண்ணீர் துடைக்கும் கைகளும் உண்டு
இன்னும் வாழனும் நூறு ஆண்டு
(கவிஞர், பா.விஜய்)

கடவுள் மனிதனுக்கு கொடுத்த கொடைகளில் உன்னதமான கொடை வாழ்க்கை எனும் கொடை. இந்த அழகிய வாழ்வு எனும் கொடை இன்னும் அழகையும், அர்த்தத்தையும் எப்பொழுது பெறுகின்றது என்றால் ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்" என்று மற்றவர்களுக்காக இதை வாழும் பொழுது தான். தங்கள் வாழ்வைமற்றவர்களுக்காக இழப்பது என்பது எல்லாராலும் முடியாத காரியம். நான், எனது, எனக்கு, என்ற குறுகிய வட்டத்துக்குள் வாழ இன்றைய நவீன உலகம் தூண்டிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் மற்றவர்களுக்காகவும் தன்னைச் சுற்றியிருக்கும சமுதாயத்திற்காகவும் தன்னை தியாகம் செய்யவதென்பது மிகவும் கடினமான விடயம் ஆகிவிட்டது. இந்த அசாதாரண தியாகத்தைச் செய்ய இம் மனநிலையில் இருக்கும் சாதாரண மனிதர்களால் முடியாது. குருக்கள் ஆண்டவரால் அழைக்கப்படுவதும் இவ் அசாதாரண பணியை மேற்கொள்ளவே. ஏன் என்றால் குருத்துவம் என்பது ஆண்டவர் இயேசுவின் பலியை அவர் நினைவாக நிறைவேற்றுவது மட்டும் அல்ல பலிப்பொருளாகவும் மாறவுமே. எவ்வாறு ஆண்டவர் இராவுணவில் பலியைக் கொண்டாடி அடுத்த நாள் பலியாகின்றாரோ, குருக்களும் பலியை ஒப்புக் கொடுக்க மட்டும் அல்ல. பலிப்பொருளாக மாற்றம் அடைய அதாவது திருப்பலியில் அப்பம் உடைக்கப்பட்டு, இரசத்துடன் பகிரப்படுவதைப் போல தங்களை உடைத்து இறையரசை கட்டியெழுப்ப அவ் அரசியல் மனித குலம் அதன் மதிப்பீடுகளான அன்பு சமத்துவம், நீதி சமாதானம் போன்றவற்றுடன் வாழ வழி செய்ய அழைக்கப்படுகிறது.

திருச்சங்கம் திருச்சபை பற்றிய கோட்பாடு எண் என்பதில் ஓர் தங்கமான விளக்கத்தைத் தருகின்றது.

''கிறிஸ்தவர்களுக்கேற்ற தம் எல்லாச் செயல்களாலும் ஆவிக்குரிய பலிகளை நிறைவேற்றுவதற்கும் இருளினின்று அவர்களைத் தம் வியத்தகு ஒளிக்கு அழைத்தவரின் ஆற்றல்களைப் பறைசாற்றுவதற்குமே அவர்கள் இவ்வாறு திருநிலைப்படுத்தப் பெற்றுள்ளனர்."

குருத்துவத்திற்கு அழைப்பைப் பெற்று இவ் வாழ்வை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்ல எல்லாரும் சாதாரண மனிதர்களே. ஆனால் ஆண்டவரின் பராமரிப்பில் நம்பிக்கை கொண்டு அவரின் அழைப்புக்கு ஆம் என்று, தயக்கம் இருந்தாலும் துணிவுடன் பதில் சொல்லி, எவ்வாறு ஓர் பட்டறையில் சாதாரண இரும்புத் துண்டு ஒன்று, உடைத்தல், நொருக்குதல் காய்ச்சல், சூடாக்கப்படுதல், உலரப் படவிடுதல், மீண்டும் மீண்டும் பரிசோதிக கப்படுதல் போன்ற பல்வேறு கடினமான படிமுறைக ளைத் தாண்டி ஓர் உருவாக்கம் பெறுகின் றதோ, அதேபோல் இச்சாதாரண மனிதர்கள் அழைத்தவரின் கைகளில் தங்களை முழுமை யாகக் கையளித்து பல்வேறு கடினமான படிமுறைகளைத்தாண்டி அழைக்கப் பெற்ற வரால் சாதாரண நிலையில் இருந்து அசாதா ரண நிலைக்கு மாற்றம் பெற்றவர்கள். பழைய ஏற்பாட்டில் பிதாப்பிதாக்கள், இறை வாக்கினர்கள், புதிய ஏற்பாட்டில் அன்னை மரியா, அப்போஸ்தலர்கள், திருத்தூதர்கள், புனிதர்கள், இன்று நாங்கள் பார்க்கும் குருக் கள், துறவிகள் அனைவர்க்கும் இது மிகப் பொருந்தும்.

1. ஆண்டவரின் அழைப்பு
2. அழைக்கப் பெற்றவர்களின் தயக்கம்
3. அழைத்தலின் உறுதி மொழி
4. அழைக்கப் பெற்றவர்கள் ஆண்டவரின்

உறுதி மொழியில் நம்பிக்கை கொண்டு இறையரசுப் பணியை சவால்களுடன் ஆரம்பித்தல். இவ் 4 அம்சங்களும் மேற்கூறிய மனிதர்களில் மிகத் தெளிவாக விளங்கும்.

சில விவிலிய எடுத்துக்காட்டுக்களையும், புனிதர்களின் வாழ்வையும் சுருக்கமாக மேலோட்டமாக பார்ப்பதனூடாக இது தெளிவாகும்.

| அழைக்கப்பட்டவர் | அழைக்கப்பட்டவர்களின் தயக்கம் | அழைத்தலின், உறுதி மொழி |
|---|---|---|
| மோயீசன் வி.ப. 4:10 | நாவன்மை அற்றவன் நான் எனக்கு வாய் திக்கும் நாவும் குழறும். | மனிதருக்கு வாய் அமைத்தது யார்? உன் வாயில் இருப்பேன். நீ பேச வேண்டியதை உனக்கு கற்பிப்பேன். |
| ஏரேமியா 1:5 | எனக்கும் பேச தெரியாது சிறுபிள்ளைதானே | அவர்கள் முன் அஞ்சாதே ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன். |
| எசாயா 6:5 | தூய்மையற்ற உதடுகளைக் கொண்டவன் நான் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான். | இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றம உன்னை விட்டு அகன்றது. |
| அன்னை மரியாள் லூக் 1:29,34 | "அவள் கலங்கி இந்த வாழ்து எத்தகையதோ"... "அது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே" | மரியா அஞ்ச வேண்டாம் கடவுளின் அருளைக் கண்ட - டைந்துள்ளீர் |
| இராயப்பர் லூக் 5:8-10 | ஆண்டவரே நான் பாவி என்னை விட்டு போய் விடும். | அஞ்சாதே இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய் |
| சின்னப்பர் 1 திமோ 1:15 தி.ப.9:15 | "பாவிகளை மீட்க கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். இக்கூற்று உண்மையானது. அந்தப் பாவிகளுக்கு முதன்மையான பாவி நான்." | "நீ செல் அவர் பிற இனத்தாருக்கும், அரசருக்கும், இஸ்ராயேல் மக்களுக்கும் முன்பாக எனது பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாய் இருக்கின்றார். |
| புனித பிரான்சிஸ் அசிசி மத் 10:10 | என்னைவிட பொடுரமான மிகப் பெரிய பாவியாரும் இல்லை. | பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் உங்கள கச்சையில் வைத்துக் கொள்ள வேண்டாம். |
| தற்பொழுது எங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் குரு யோவான் 15:16 | எனக்கு படிக்கத் தெரியாது கூச்ச சுபாவம். பேச்சாற்றல் இல்லை. எப்படி குருவாக முடியும். | "நீங்கள் என்னை தேர்ந்து கொள்ள வில்லை. நான் தானே உங்களைத் தேர்ந்து கொண்டேன்" |

இந்த எடுத்துக் காட்டுகள் சாதாரண மனிதர்களை ஆண்டவரின் வல்லமையில் நம்பிக்கை கொண்டு, அவரின் அழைப்புக்கு ஆம் என்றால் அசாதாரன மனிதர்களாக ஆண்டவர் மாற்றுவார் என்பதை தெளிவு படுத்துகின்றது.

இவ் அசாதாரண மனிதர்கள் மறுகிறிஸ்துவாக வாழ மக்கள் இறையரசைச் சுவைக்க தம்மிடம் உள்ளதை எல்லாம் இழப்பவர்கள்.

இழப்பை இழப்பாகக் கருதினால் இழப்புக்கள் ஆனால் இழப்பை இலபமாகக் கருதினால் இழப்பு இலாபமே.

கோதுமை மணி அதன் உருவத்தை இழக்கிறதே. அது இழப்பா? இல்லையே! முப்பது மடங்கு அறுபது மடங்கு, நூறு மடங்கு பலன்தரும் மணியாக அது மாற அதுதன் உருவத்தை இழந்துதான் ஆக வேண்டும். இலையுதிர் காலத்தில் குயில் ஒன்று மரங்களைப்பார்த்து இப்படிக் கேட்டிகின்றது. ''எல்லா இலைகளையும் இழந்து நிற்கிறீர்களே எப்படி முடிகின்றது?

மரம் கூறியது! குயிலே குயிலே பூங்குயிலே! இ.்.து இழப்பு அன்று வசந்தத்திற்கு ஒரு தயாரிப்பு.

இறையரசு மலர தங்களை இழக்க தம்மை கையளித்த அசாதாரண மனிதர்களான குருக்கள் தங்கள் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட இக்குருக்கள் ஆண்டிலே தொடர்ந்தும் குருக்களுக்காகச் செபியுங்கள்.



"நீங்கள் அடிக்கடி தண்ணீர் குடித்து வர வேண்டும்...."

"உங்கள் மருந்தை தான் சாப்பிட்டுக் கிட்டு வரேனுங்களே! அது போறாதுங்களா!;;

## எங்குற்றாய் தந்தையே

எதிலும் வெறுமை எதிலும் வெறுமை
வெறுமனே நீயும் வெறுந்தெங்கொதுங்கினாய்?
காலங்கள் கரைய கனவுகள் கலைய
மாயமாய் நீ மறைந்த மர்மந்தான் என்ன?

உயர்ந்த உள்ளம் எனக்கு
ஊன் உறக்கமின்றி - ஊக்கமாய்
உழைத்தாயே உயர்ந்தன உள்ளங்கள்
கட்டடங்கள் கரை கடந்தன
எல்லாமே உன்னாலே உயர்ந்தது கல்லூரி

கல்வி சரி, கலைகள் சரி
பிழையின்றித் தழைத்தனவே
கல்விமான்கள் வழி பட்ர
கண்ணாக இருந்தாயே
கண்ணிருந்தும் காண முடியவில்லையே
கண்ணிமைக்கும் நேரத்தில் கவரப்பட்ட
மாய மென்ன?

உன் பெயர் கூவிட கூலியா தேவை
ஒன்றா, இரண்டா, உன் திறமை கூறிட,
கவர்ச்சியான ''ஸ்கோர் போட்''
'Home of Love' எனும் அன்பின் இல்லம்
உன் அன்பின் வெளிப்பாடுகள் இவை
இறந்துபோன நல்லாசான் ஜேம்ஸ்சுக்கு
ஆசிரியர் கூடம்
எக்கூடத்தில் நீ உறைகின்றாய்?
கூடங்கள் பல அமைத்தாய் - நாம்
ஒன்று கூட காலம் கனியவில்லையே.
பழுத்த தலை நீ
அனுபவத்தின் ஆணி வேர் நீ
நிர்வாகத்தின் நிறைவு நீ
உளம் புரிந்து உறவாடும் உத்தமன் நீ
கல்லானமனமும் கரையும் உன்
கனிவான முகங்கண்டு

கள்ளமில்லை உன் மனதில்
அரசியல் தெரியா ஆன்மீக வாதி நீ
உன் முகங்கண்டு அகங்குளிர
காலங்கள் அகலுவதேன்?

அன்பான, ஆண்டவனின் அடியானே,
ஆண்டவன் இயேசு துணைபுரிவார்
உன் பெயர் கொண்ட சூசை
ஆசையாய் உனை ஆண்டிடுவார்
அசையும் இவ்வுலவில் அசையா
உன் இலட்சியம்
இலட்சம் பெறும்

காணுவோம் காலகெதியில்
கண்கண்ட தேவன் கருணை புரிவார்
''அஞ்சாதே, அஞ்சாதே
நான் என்றும் உன்னோடு''என்ற
யேசுவின் வாத்தை எம்மோடு
பேருவகையுடன் பேசுவோம் ஒருநாளில்
வல்லதேவன் வரம்தர வேண்டுவோம்.

ஆசிரியர் எஸ். ஸ்ரனிஸ்லோஸ்.

## மகத்துவம் மிக்க குருத்துவம்

ஆண்டவரின் திராட்சை தோட்டத்தில் பணிபுரிய
இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அருட்பணியாளர்களே
அமைதியின் கருவியாய் அன்புப் பணி செய்து
இறைவனின் வார்த்தையாம் விதையை அவனியெங்கும் விதைத்து
அது நூறு மடங்கு பலன் கொடுக்க உரமூட்டுபவர்களே

இயேசுவின் சிலுவைப் பலியாம் திருப்பலியை
அனுதினமும் ஒப்புக்கொடுத்து
எமது நன்றிகளையும் வேண்டுதல்களையும்
அவர் பாதம் வைத்து
இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும்
எமக்கு பெற்றுத்தரும்
மாபெரும் ஒப்பற்ற குருத்துவ பணியாளர்களே

விசுவாச வாழ்வுக்கு வழிகாட்டி
வழிபாடுகள் சமயக் கடமைகளோடு
சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு
பிறர் குறையை மன்னித்து மனித நேயம் பேணி
ஏழைகளினதும் துன்பப்படுவோரினதும் துயர் துடைக்கும்
அர்ப்பணிப்பு மிக்க பணியாளர்களே

நீங்கள் எல்லோரும் இறையாசீரால் நிரப்பப்பட
ஆன்ம உடல் நலத்துடன் ஆவியின்
அருள் வரங்களும் கிடைத்திட
பணி வாழ்வில் ஏற்படும் இன்னல்களில்
இறைவன் உற்றதுணையாய் இருந்திட
முதல் குருவாம் இயேசு ஆண்டவரை
என்றுமே வேண்டுகின்றேன்

அ. யஸ்மின்,
கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரே, எமது குருக்களை விசுவாசமுள்ளவர்களாக்கும்

– அருட்பணி. ம. டேவிற் –

இயேசுவின் கருவூலக் காவலர்கள் என்ற முறையில், குருக்களுக்கு சக்தியின் தலை சிறந்த ஊற்றாக இருப்பது ஆண்டவர் இயேசுவில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசமாகும். இது குருக்கள் வியக்கத்தக்க அளவில் வலிமையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மிகுந்த உயிரோட்டமுள்ள, சக்தி வாய்ந்த களஞ்சியமாகும். இந்தக் குருக்களின் ஆண்டில் ஆண்டவர் எமது குருக்களை விசுவாசம் நிறைந்தவர்களாக்கும்படி மன்றாட வேண்டியவர்களாயிருக்கிறோம் "நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி; கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை" (எபிரேயர்) :

முரண்பாடுகள் ஐயுறவுகள், குறிக்கோளின்மை நிறைந்த உலகில் நாம் வாழ்கிறோம். ஆனால் இந்த நிலமைகளின் மத்தியில் நாம் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டிய காரியங்கள் பல உள்ளன என்பதை தாமும் விசுவசித்து எடுத்துக் கூறும் குருக்கள் எமக்குத் தேவை. சுருங்கக்கூறின், இறைவன் இருக்கிறாரெனறும், அவர் எம்மை ஆழமாக அன்பு செய்கிறாரென்றும் அவர் எமக்கு உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார், "வாழ்வும் வழியும் உண்மையுமான" (யோவான் 14:16) தமது திருமகனையே அனுப்பி வைத்தார். அவரது திருமகன் தமது மரணத்தாலும் உயிர்ப்பினாலும் எம்மை மீட்டார். அவர் வல்லமையுடையவராக எம்மோடு இன்றும் உயிர் வாழ்கிறார் என்றும் சொல்லித்தர குருக்கள் எமக்குத் தேவை. ஆழ்ந்த நம்பிக்கையிலிருந்தே இந்த உறுதிப்பாடு பிறக்கமுடியும். மிகுந்த நம்பிக் கையுடன் ஆற்றப்படும் போது குருத்துவப்பணி அறிவூட்டும் செயற்பாடாக அமைகின்றது. எனவே நம்பிக்கையே குருக்களுக்குத் தேவைப்படும் மிக இன்றியமையாத பண்பாகும். இது உலகம் முழுவதிலுமுள்ள கத்தோலிக்கரின் நாளாந்த ஆன்மீக உருவாக்கல்ல அவர்களுக்குத் துணை புரிகிறது.

எமது குருக்கள் அனைவரும் இறையியல் அறிவில் நன்கு உருக்கம் பெற்றவர்கள். ஆனால் அதனால் அவர்கள் மிகுந்த நம்பிக்கையுள்ளவர்கள் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. நம்பிக்கையின் இலக் கணமானது அடிப்படையில் சில ஆய்வுப் பொருள்களையும் கோட்பாடுகளையும் நம்புவதில் அடங்கியிருக்கவில்லை. ஆனால் அது ஓர் ஆளை, அதாவது இயேசு கிறிஸ்துவை சந்திப்பதாகும். முதல் நிலையில் அவரை நாம் நம்புகிறோம். இதிலிருந்து அவரும் திருச்சபையும் கற்பித்தவற்றில் நம்பிக்கை பிறக்கிறது. ஒரு தாய் - பிள்ளையின் அனுபவத்தோடு இதனை ஒப்பிடலாம். "நான் அழும் போது அவள் வருவாள், நான் பயப்படும் போது அவள் என்னைப் பற்றிக்கொள்வாள், நான் பசியாயிருக்கும்போது அவள் எனக்கு உணவளிப்பாள், நான் தனிமையாயிருக்கும் போது அவளிடம் செல்வேன்' என்று பிள்ளைக்கு நிச்சயமாகத் தெரியும். இத்தகைய நம்பிக்கையனுபவம் தான் எம்மனைவரிடமும், மற்றெல்லோரைவிட எமது குருக்களிடத்தில் இருக்க வேண்டியதாகும். சாள்ஸ் டி புகோல்ட் இதனைத் திட்டவட்டமாகக் கூறுகின்றார். "இறைவன் இருக்கின்றார் என்று நான் உணர்ந்த அக்கணமே, அவருக்காக மட்டுமே வாழ்வதைத் தவிர என்னால வேறொன்றும் செய்ய முடியவில்லை. நம்பிக்கை உலகத்தின் முகமூடியைக்கிழித்து, எல்லாவற்றிலும் இறைவனை வெளிப்படுத்துகின்றது. இதனால் அசாத்தியமானது ஒன்றுமில்லை என்று ஆகின்றது. கவலை, அச்சம், ஆபத்து போன்ற சொற்கள் அர்த்தமற்றவையாகின்றது. எனவே நமபிக்கையுள்ளவர், தாயின் கையைப் பிடித்திருக்கும் குழந்தை போல, தமது வாழ்வில் அமைதியுடனும், சமாதானத்துடனும், ஆழ்ந்த மகிழ்ச்சியுடனும் இருக்கின்றார் நம்பிக்கையுள்ள ஒருவர் மன அமைதியோடு வாழ்வின் அப்பட்டமான உண்மை நிலைக்கு முகம்கொடுக்கும் துணிவுள்ளவராய் இருப்பார் இறைவன் ஒரு தாய் போல நெருக்கமாக பற்றிவழி நடத்திச் செல்கிறார் என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு எப்போதும் இருப்பதால் அவர் மலை போல அசைக்க முடியாத உறுதி பெற்றவராயிருக்கிறார் ஒரு இந்த உள்ளார்ந்த பயணத்தை மேற்கொள்ள வேண்டியவராய் இருக்கிறார் வாழ்க்கையின் புயல்களினூடாக சென்று முதிர்ச்சியடைந்தவராய் தமது மந்தையை விசுவாச பயணத்தில் வழி நடத்தக் கூடியவராகின்றார் குருத்துவத்திலுள்ள நெருக்கடி பற்றிக் கூறும போது ஆயர் புல்டன் ஷீன் (Bihop fullon sheen ) "குருத்துவத்திலுளள நெருக்கடி அடையாளம் பற்றியதல்ல விசுவாசம் பற்றியது" என்று கூறுகின்றார். ஒரு குருவானவருக்கு இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கை இருந்தால், நெருக்கடிகள் பிரச்சினைகளஏற்படும் போது அது அவரைப் பாதுகாக்கும். நியூயோர்க் நகரின் தற்போதைய பேராயர், குருக்கள் இறைவனிடத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியதன் அவசியம் பற்றிக் கூறும் போது தமது சொந்த அனுபவத்தைப்பற்றிக் எடுத்துரைக்கின்றார். பங்கிலே தாம் மிகவும் மெச்சிய ஓர் இளைஞன் குருவாகி, பின்பு தனது குருத்துவத்தைக் கைவிட்ட போது தாம் கவலை அடைந்ததாக கூறுகின்றார் தமது குருத்துவத்தைக் கைவிட்ட குரு அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். "ஆம் நான் எனது குருத்துவ அழைத்தலை இழந்து விட்டேன். ஆனால் பல வருடங்களுக்கு முன்னரே எனது விசுவாசத்தை இழந்து விட்டேன் என்பதை நான் கூறவேண்டும். விசுவாசமில்லாத ஒரு குருவைவிட பரிதாபத்திற்குரியவர் ஒருவரும் இல்லை. குருக்கள் குருத்துவ நிலையை விட்டு விலகுவதற்கு வெளிப்படையான சில காரணங்கள் இருக்கலாம் என்பது தெளிவாகின்றது. ஆனால் இந்த வெளிபபடையான காரணங்களுக்குக் கீழ் மையமான காரணம் ஒன்றுண்டு. அதுதான் நம்பிக்கையின்மை.

இந்நாட்களில் இறைவனிடம் மிகுந்த நம்பிக்கையைக் காட்டும் எத்தனையோ பொது நிலையினரைக் காண்கிறோம். தமது வாழ்வில் முகங்கொடுக்க நேர்ந்த பல இடர்பாடுகளால் மக்கள் விசுவாசத்தில் மிகுந்த முதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். குருக்களும் தமது விசுவாசத்தில் மிகுந்த முதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள். குருக்களும் தமது விசுவாசத்தில் உறுதிப்படுவது அவசியம் என்பதும் இத்தகைய பொது நிலையினரின் ஊக்கமளிக்கும் வாழ்விலிருந்து சிலவற்றை அவர்கள் பின்பற்றலாம் என்பதும் இதிலிருந்து பெறப்படுகின்றது புனித பவுல் திமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும் போது "உனது விசுவாசத்தைக் கொழுந்து விட்டெரியச் செய் அது அணைந்து போக விடாதே இந்த விசுவாசத்தை முதலில் உன் தாய் யூனிக்கிடமும் பின்னர் உன் பாட்டியிடமும் கண்டேன்" என்று சொல்கிறார். குருக்களும், குருமாணவர்களும் அழைப்புப் பெற்ற வரலாறுகள், பெற்றோரோ, குறிப்பிடத்தக்க வேறு ஆட்களோ அவர்களது விசுவாசத்துக்கு மூல காரணமாய் இருந்தமைக்கு சான்று பகர்கின்றன. புட்டாறு இறைதியான நடுநிலையத்தின் ஆங்கிலப் பகுதிக்கு இயக்குனராக இருக்கும் அருட்தந்தை அகஸ்தீன் வல்லூரான் தாம் குழந்தையாக இருந்தபோது தமது தாயார் எவ்வாறு படிப்படியாக தம் உள்ளத்தில் விசுவாசத்தை ஊட்டி வந்தார் என்பதை எடுத்துக் கூறினார்

தொடரும்...

# கார்த்திகை மாதத்தில் இறைபதமடைந்தோரை நினைந்து இறைவேண்டல் செய்வோம்

**முகவுரை:**

நாம் சார்ந்திருக்கும் கத்தோலிக்க திருச்சபையானது வருடம் தோறும் கார்த்திகை மாதத்தில் இறந்த ஆன்மாக்களை நன்றியோடு நினைக்கவும் அவர்களுக்காக இறைவேண்டல் செய்யவும் நம்மை அழைத்து நிற்பதோடு கார்த்திகை மாதம் 2ஆம் திகதியை இறந்த சகல ஆன்மாக்கள் தினமாக பிரகடனம் செய்து அன்றைய தினத்தில் விஷேட வழிபாடுகளையும் முன்னெடுக்கின்றது. உத்தரிப்பு நிலையிலிருக்கும் ஆன்மாக்களுக்கு இறைவனின் கருணை கிடைக்க வேண்டும் என்றும் அவர்களின் முடிவில்லாத வாழ்வை தமதாக்கி இறைவனோடு ஒன்றித்து வாழ வேண்டுமென்றும் இவ்வுலகில் இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்து என்றும் இறை சன்னிதானத்தில் புனிதர்களோடு மகிழ்ந்திருக்கும் ஆன்மாக்களுக்காக இறைவனுக்கு நன்றியோடு புகழ்பாடவும் அழைக்கப்படுகின்றோம்.

**மரணமும் நிலைவாழ்வும்:**

"இந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு முடிவில்லாத வாழ்வைப்பற்றி மறையுண்மைகளை சிந்திக்க வைப்பதோடு மறைந்து விடக்கூடியவை எவையென்றும் நிலைத்திருக்கக்கூடியவை எவையென்றும் நம்மை சீர்தூக்கி பார்க்கவைக்கிறது." என்று திருத்தந்தை 23ஆம் யோவான் குறிப்பிடுகின்றா "இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாயென்று நான் உறுதியாக சொல்கிறேன்" (லூக் 23:43) என்ற இறைவார்த்தையின் ஊடாகவும் "நீங்கள உள்ளம் கலங்க வேண்டாம் கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. நான போய் உங்களுக்கு இடமேற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன் அப்போது நான் இருக்குமிடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்" (யோவான் 14:1-13) என்ற இறைவார்த்தையின் ஊடாகவும் நிலைவாழ்வு ஒன்று உண்டு என்பதை இறைமகன் இயேசு நிலை வாழ்வை விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்ளும் நாம் மரணத்தினூடாக நம்மை விட்டு பிரிந்து சென்றவர்களுக்காக செபிக்க கடமைப்படுகின்றோம். உமது செபங்கள் மன்றாட்டுக்கள், திருப்பலிகள், தானதர்மங்கள் என்பன அவர்களுக்கு பாவ மன்னிப்பை பெற்றுக் கொடுத்து முடிவில்லாத வாழ்வை உரிமையாக்க வழி கோலுகின்றது புனிதமான செயற்பாடுகள்,

"பாவங்களில் இருந்து மீட்கப்படும்படி இறந்தவர்களுக்காக இறைவேண்டல் செய்வது புனிதமும், பயனுள்ள எண்ணமுமாய் இருக்கின்றது" (2மக்கபேயர் 12:46) என்ற இறைவார்த்தைக்கிணங்க இறைபதம் அடைந்தவர்களுக்காக நாம் முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகள் மூலமாக இறைவன் தமது கருணையை இரக்கத்தையும் வெளிப்படுத்தி அவர்களின் ஆன்மாவை மீட்டெடுத்து நித்திய பேரின்ப வீட்டை அருளுகின்றார் என்பது எமது நம்பிக்கையாகும் எனவே இறந்தவர்களை விஷேடமாக நினைவுகூறுகின்ற இந்த கார்த்திகை மாதத்தில் இவ்வுலகில் வாழ்கின்ற இறைய ரட்சிப்பயணம் மேற்கொள்ளும் வாழும் திருச்சபையாக இருக்கும் நாம் இறைபதம் அடைந்தவர்களுக்காக விஷேட விதமாக மன்றாடுவோம்

முன்னோர்களுக்காக செபிப்போம எம்மை பெற்றுவளர்த்து அன்பு செலுத்தி தமது தியாகம் நிறைந்த வாழ்வால் எம்மை உயர்த்தி விட்ட அன்புப் பெற்றோர்களுக்காக மன்றாடுவோம். ஒரேதாயின் வயிற்றில் உடன் பிறந்து அன்புறவு கொண்டு எமது வாழ்வின் சோகங்களையும் சுமைகளையும் எம்மோடு பகிர்ந்து அன்றாட சிலுவைகளை எம்மோடு சேர்ந்து சுமந்த எம் உடன் பிறப்புக்களை நினைத்து செபிப்போம் அன்போடு கண்டித்து அறிவூட்டி எம்மை நற்பிரஜைகளாக உருவாக்கிய ஆசிரியர்களுக்காக இறைவேண்டல் செய்வோம். இன்னும் ஆன்மீக வாழ்வில் எம்மை நெறிப்படுத்திய ஞானத்தலைவர்களையும் பங்குத்தந்தையர்களையும் நினைந்து நன்றியோடு மன்றாடுவோம் இறுதியாக யாரும் நினையாத அந்தரித்த ஆன்மாக்களுக்காகவும் நாட்டில் இடம் பெற்ற கொடுமையான போரில் அகப்பட்டு இறந்த ஆன்மாக்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஆன்மாக்களுக்காக விஷேடமாக மன்றாடுவோம்.

**முடிவாக**

இறைபதமடைந்தோரை நினைத்து அவர்களுக்காக விஷேடவிதமாக செபிக்கின்ற இந்த உன்னதமான மாதத்தில் அவர்களின் நினைவுச்சின்னங்களையும் கல்லறைகளையும் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும் போது அவர்களோடு எமக்கிருக்கும் அன்புறவை நாம் மீட்பதோடு எமது மரணத்தைப் பற்றியும் சிந்திக்க இறைஞானம் எம்மை அழைத்து நிற்கின்றது. கல்லறைகளை தரிசிக்க இருக்கும் நாம் இக்கல்லறை வாழ்வு வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டு ஆன்மீக வாழ்வில் புனிதமாக வாழ்ந்து எம்மையும் மரணத்திற்கு தயார் படுத்த இறையருள் வேண்டுவோம்.

இ. அ. அமலரட்ணம், யாழ் பேராலயம்

# விவிலியத்தை படியுங்கள் விஞ்ஞானியாகலாம்

மனிதனது பிறப்பும் இறப்பும் கடவுளின் கையில் உள்ளது. அவரே அந்த நேரத்தை நியமித்து வைத்திருக்கின்றார். இன்று - ஜாதகத்தின் தாக்கத்தால் பிறப்பு நேரம் மனிதனால் குறிக்கப்படுவதாக மாறி வருகின்றது. இது தான் நல்ல நேரம் என்று பொய்க்கணக்கு போட்டு சிசேரியன் பண்ணி விடுகின்றார்கள். என்னே பரிதாபம் பரிதாபம் என்று சிசேரியனை சொல்லவில்லை- ஜாதகம் பார்ப்பதைச் சொல்கின்றேன்.

மனிதனது இறப்பு எப்பொழுதும் வரலாம் எப்படியும் வரலாம் எங்கும் வரலாம்..... ஆனாலும் மனிதனுக்குக் கண்டுபிடிக்க இயலாத ஒரு காரியம் இருந்தது மனிதனது உயிர் எங்கே உள்ளது என்பது தான். இந்தக் கேள்வி தான் அறிவியல் அறிஞர்களைத் திணறடித்தது. மனிதனது உயிர் மூளையில் உள்ளது என்றனர் சிலர் வேறு சிலர் அது இதயத்தில் உள்ளது என்றனர். கி.பி 1628-ல் இதயத்தைக் கண்டறிந்த வில்லியம் ஹார்வே எனும் உயிரியல் வல்லுனர் மனித உயிர் இரத்த ஓட்டத்தில் உள்ளது என்று நிரூபித்தார். ஆனால் உண்மை என்ன கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே லேவி 17:11ல் ஆண்டவர் வாக்கு இவ்வாறு உள்ளது உடலின் உயிர் குருதியில் (இரத்தத்தில் உள்ளது)

# மறைக்கல்வி மறுமலர்ச்சி

1961ம் ஆண்டு தமிழ்நாடு மறைக்கல்வி நடுநிலையம் நிறுவப்பட்டது. ஆயர் பேரவையின் அறிவுரைகளுக்கேற்ப இந்த நடுநிலையம் தமிழ்நாடு முழுவதும் மறைக்கல்விப்பணி ஆற்றி வருகின்றது. மறைக்கல்விப் பாட நூல்களையும் ஆசிரியர் துணை நூல்களையும் தயாரித்து அச்சிடுதல் மறைக்கல்விக்கான கேள்வி - காட்சிச்சாதனங்களைத் தயாரித்தளித்தல், ஞாயிறு மறைக்கல்வியை ஊக்குவித்தல், பள்ளிகளில் மறைக்கல்விப் பணியை ஊக்குவித்தல், ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பணிகளால் தமிழக இறை மக்களின் விசுவாச வாழ்வின் வளர்ச்சிக்கு வழி செய்யப்படுகின்றது. 1974 முதல் இந்த நடுநிலையம் விவிலியம், மறைக்கல்வி, திருவழிபாடு ஆகிய மூன்று துறைகளையும் ஒன்றிணைத்து முப்பணி நடுநிலையமாகச் செயல்ப்படுகின்றது.

யோ. நொய்லின்
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்.

**சந்துரு :** நீங்க மோட்சத்திற்கு போக விரும்புகிறீரா, நரகத்திற்கு போக விரும்புகிறீரா?

**நிஷாந் :** நான் நரகத்துக்கு போகத்தான் விருப்புறன்

**சந்துரு :** ஏன்ரா...

**நிஷாந் :** நரகத்திலதான் எனக்குத் தெரிந்தவர்கள் முழுப் பேரும் வருவினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு. ஜோசப் செல்வன் பிகிறாடோ செ.தா

ஒவ்வொரு ஞாயிறு சிந்தனைத் துளிகளையும் வாசிக்கும் முன்னர் அன்றைய ஞாயிறு தினத்திற்குரிய திருவாசகங்களை நன்றாக வாசித்து அவ்வாசகங்களில் உங்களின் மனதினைத் தொடும் வசனங்களை தியானித்து அதன் பின்னர் இந்த சிந்தனைத்துளிகளை தியானத்தோடு வாசித்தால் நற் பயன் பெறலாம்.

## பொதுக்காலம் 30 ஆம் வாரம்

எரேமியா 31:7-9, எபிரேயர் 5:1-6, மாற்கு 10:46-52

### "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?"

இயேசு ஆண்டவரின் புனித நாமத்தில் அன்பான சகோதர சகோதரியரே,உங்கள் அனைவருக்கும் இறையாசீர் உரித்தாகுக. காலம், நேரம் எவ்வளவு வேகமாக ஒடுகின்றது பார்த்தீர்களா? இந்த வருடத்தின் இறுதி மாதங்கள் இதோ வந்துவிட்டன. செபமாலை மாதாவுக்கு என ஒதுக்கப்பட்ட இந்த மாதத்திலே தனியாக, குழுவாக, குடும்பங்களாக, பங்குத் திருச்சபையாக, மறை மாவட்டமாக எல்லோரும் திருச்செபமாலை ஓதுவதும்; எங்கள் குடும்பங்கள் எல்லாவற்றிகும் தேவையான பாதுகாப்பையும், மனநின்மதியினையும் எமது அன்னையின் பரிந்து பேசுதலால் பெற்றுக் கொள்ள எம் அனைவரையும் ,நாளாந்தம் அந்த அன்னையின் பாதுகாவலில் ஒப்புக் கொடுத்து செபிப்பதும் இன்றியமையாத, இக்காலத்திற்கு தேவையான ஒரு செயலாக இருக்கின்றது.

இன்னும் குறிப்பாக,
கனத்து நிற்கும் மனங்களுக்கும்,
கவலை தோய்ந்த முகங்களுக்கும்,
கண்ணீர் நிறையும் கண்களுக்கும்,
கரைந்து உருக்கும் நோய்களுக்கும்,
காரணம் கண்டு பிடிக்க இயலா
நிகழ்வுகளுக்கும்,
காலை தொடங்கி மாலை வரை
விடுதலைக்காக,
ஏங்கி முகாம்களில் எழும் விம்மல்,
பெருமூச்சுக்களுக்கும்,

இறைமகன் இயேசுவின் சக்திமிக்க புனித நாமத்தில் சுமூகமானதொரு பதில் கிடைக்க வேண்டும் என நாம் இடைவிடாது உபவாசத்தோடு செபிக்க வேண்டும். ஆனால் இன்றைய நாட்களில் இந்த உலகில் நாம் பார்ப்பது என்னவென்றால், அவசர உலகத்தில் அடித்துக் கொண்டு ஓடும் வேக நீரோட்டத்தில் சிக்குண்டு, அயலவன் கண்ணீர்க் கதையைக் கேட்கவும், கொஞ்சம் கவனித்து உற்று நோக்கவும், அரவணைத்து ஆறுதல் மொழி கூறவும் மனிதர் எவருக்கும் நேரமில்லை. கால்களில் சுடு நீர் ஊற்றப்பட்டது போல ஓடிக் கொண்டிருக்கின்றனர். நின்று, நிதானித்து நிலமையைக் கண்ணோக்கி அயலவருக்கு என்ன தேவை என அறிந்து கொள்ள இன்றைய ஞாயிறு தினம் எம்மை அழைத்து நிற்கின்றது.

தனது மக்கள் மீது இறைவன் எவ்வாறு பாசம் கொண்டு அவர்கள் துன்பங்களையெல்லாம் துடைக்க காத்திருக்கின்றார் என முதல் வாசக திருப்பொழிவும், எல்லா மக்களுக்காகவும் குறிப்பிட்ட வேளைகளில் இறைவனின் சன்னிதானத்தில் செபிப்பதும், அவர்களுக்காக பலிகளை இறைவனை நோக்கி எடுத்துச் செல்வதும் குருக்களினுடைய பாரிய கடமையாகும் என இரண்டாவது வாசக திருப்பொழிவும் எடுத்துக் கூறி நிற்கின்றன. அதனைத் தொடர்ந்து நற்செய்திப் பொழிவானது" இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு மனமிரங்கும்" என கூக்குரலிடும் பார்த்திமேயுவுக்கு பார்வை அளிக்கப்படுவதினை கூறுகின்றது.

இயேசு ஆண்டவரை நின்று, திரும்பிப் பார்த்து, அவனுக்கு கண்பார்வை அளிக்கச் செய்ய வைத்த அவனுடைய விசுவாசத்தை ஆண்டவர் பெரிதும் பாராட்டுகின்றார். நம்பிக்கையோடு கேட்கும் அவனது செபத்துக்கான பிரதிபலனை ஆண்டவர் அளிக்கின்றார். எங்கள் ஒவ்வொருவருடையவும் கிறிஸ்தவ வாழ்விலே எமது விசுவாசத்தினை பரிசோதிக்கும் எத்தனையோ நிகழ்வுகள் நடந்தேறிய பின்னரும் நாம் இயேசுவின் அளைகடந்த அருளில் விசுவாசம் கொள்ள தவறுகின்றோம். எல்லா இடங்களிலும் ''கைராசியான" வைத்தியர் ஒருவர் இருப்பார்; மக்களெல்லாம்; ''என்ன வருத்தமானாலும் அவருடைய வைத்தியசாலைக்கு செல்லுங்கள் குணமாகும்" என 50% மேல் நம்பிக்கையோடு செல்லும் பொழுது அவர் சாதாரண மருந்தைக் கொடுத்தாலே குணமாகி விடுவதனை காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அதே நம்பிக்கையை நாம் இறைவனில் காட்டுவதில்லை ஆகவேதான் இயேசு ''கடுகளவு" விசுவாசம் இருந்தாலே அரும் பெரும் காரியங்கள் எல்லாம் என வலியுறுத்துகின்றார். அசையாத விசுவாசம் இருந்தால்; நாம் ஆண்டவரே நான் கேட்டதை எப்போது தருவீர் என்றோ, சாத்திரம், சடங்கு, செய்வினை, சூனியம், காலம் நேரம், கறுப்பு, வெள்ளையென்று வாழமாட்டோம். அந்தக்குருடன் ஆண்டவரே நான் பார்வை பெற வேண்டும் எனக் கேட்டதுபோல்" ''ஆண்டவரே எமது குறையுள்ள விசுவாசத்தை உறுதிப்படுத்தும் என்று கேட்போம்" விசுவாசம் குணமாகும்.

## பொதுக்காலம் 31 ஆம் வாரம்

திருவெளிப்பாடு 7:2-4, 9-14, 1யோவான் 3:1-3, மத்தேயு 5:1-12

### "மனிதருள் புனிதராய் வாழ்வோம்"
### அனைத்து புனிதர்கள் பெருவிழா

பொதுக்காலத்தின் 31ம் ஞாயிறு தினமாகிய இன்று திருச்சபையானது அனைத்துப் புனிதர்களுடைய பெருவிழாவை பெருமகிழ்ச்சியோடு கொண்டாடி மகிழ்கின்றது. ''புனிதர்கள் என்போர் யார்?" புனிதர்கள் எல்லோரும் வானத்தில் இருந்து பூமியில் விழுந்தவர்கள் அல்ல, அவர்களும் எம்மைப்போல் சாதாரண கிறிஸ்வர்களே. அவர்கள் அனைவரும் தமது சாதாரண வாழ்க்கைக் காலத்தில் இயேசுவுக்காக தமது வாழ்க்கை முழுவதையும் இயேசுவுக்காக முற்றும் முழுதாக கையளித்தவர்கள். இந்தப் புனிதர்கள் எல்லோரும் எவ்வாறு விண்ணக மகிமையில் வீற்றிருக்கின்றனர் என்றும், நாம் கடவுளின் மக்களாக இருந்தோம் என்றால் நாம் அவரை அவர் இருப்பது போலவே காண்போம் என முறையே முதல் வாசக திருப்பொழிவும், இரண்டாம் வாசக திருப்பொழிவும் எடுத்துரைக்கின்றனர். நற்செய்தி வாசகமானது புனித வாழ்வினை நாம் கைக்கொண்டு வாழ வேண்டுமென்றால் இவ் உலகில் நாம் எவ்வாறான ஏற்றத்தாழ்வுகளையும் இழிநிலைகளையும் அடைந்தாலும் ஆண்டவன் அரியணை முன்னே நாம் பேறுபெற்றவராவோம் என்பதனை இயேசு ஆண்டவரே எடுத்துக் கூறுவதனைக் காண்கின்றோம்.

பூமியை வென்றவர்கள்
புயல்களைக் கண்டவர்கள்
அகந்தையை கொன்றவர்கள்
ஆடையைத் துறந்தவர்கள்
அண்ணலாம் இயேசுவின் அன்புக்காக
ஆவி துறந்தவர்கள் புனிதர்கள்

கிறிஸ்தவம் என்பது 200 வருடத்திற்கும் மேலான இந்த உலகின் உயிருள்ள சரித்திரம். கிறிஸ்தவ விசுவாசம் என்பது எத்தனையோ ஆயிரம் புனித கிறிஸ்தவ விசுவாசம் என்பது எத்தனையோ ஆயிரம் புனித கிறிஸ்தவ விசுவாசிகளின் குருதியில் கட்டப்பட்டது. அவர்களுடைய வாய் மொழிப் போதனையாலும் ஆக்க பூர்வமான முயற்சிகளாலும் இன்று வரை அசையாத தூணாக நிமிர்ந்து நிற்பது.

இந்தப் புனிதர்களின் வழிநடந்து திருச்சபை இன்று வரை எத்தனையோ போர்களையும், கலாபனைகளையும், அச்சுறுத்தல்களையும் கடந்து உலகினை செழிப்பாக்கிக் கொண்டிருக்கின்றது. குருதியில் அத்திவாரம் இட்டு கட்டப்பட்ட இந்த விசுவாசக் கூட்டம் விழுந்து விடாமல், பிளவு படாமல் காக்கும் பாரிய பொறுப்பு ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை வளர்த்தெடுப்பதும் வாழ வைப்பதும் எமது தலையாய கடமையாகும்.

ஒவ்வொரு குடும்பங்களிலும் குறைகள் இருக்கின்றன. சண்டைகள், சத்தங்கள், சச்சரவுகள் வருகின்றன. ஆனால் நாம் யாருமே குடும்பத்தை குறை கூற முயற்சிப்பதில்லை ஏனென்றால் குடும்ப கௌரவம் மிக மிக முக்கியம். அதேபோல் கிறிஸ்தவ திருச்சபையும் நமது பெரிய விசுவாசக் குடும்பம் இதனை சிதறிப் போகா வண்ணம் கட்டிக் காப்பதும் எமது புனித சாட்சிய வாழ்வால் வாழ வைத்து வலுப்படுத்துவதும் எமது தலையாய கிறிஸ்தவ கடமையாகும்.

## யாழ் மாவட்ட – JRS இன் ஆசிரியர் தின விழா

யாழ் மாவட்டத்திலே பணியாற்றி வருகின்ற JRS நிறுவனமானது தனது முதன்மைப் பணியாக கல்விப் பணியினை மேற்கொள்கின்ற முன்பள்ளி, மாலைநேர மையம், கணணி மையம், தையல் பயிற்சி மையம் போன்றவற்றில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின நிகழ்வினை 11.10.09 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் J.R.S யாழ் மாவட்ட இணைப்பாளர் மறைபணி T. எட்வின் (O.M.I) அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.S.ரவீந்திரநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினராக அமல உற்பவ முதல்வர் மறைபணி. P.P. பிலிப் (O.M.I) அடிகளாரும், கௌரவ விருந்தினராக யா.றோ.க.த. பாடசாலை அதிபர் திரு.S. நோபேட் உதயகுமார் அவர்களும், மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் மறைப்பணி ஜோர்ஜ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ் ஆசிரியர் தின விழாவில் வலிகாம, வடமராட்சி, தென்மராட்சி, தீவக ஆசிரியர்கள் 134 பேர் கௌரவிக்கப்பட்டதோடு புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்களும், மற்றும் JRS முன்பள்ளிகளுக்கு நடத்தப்பட்ட ஆங்கிலக் கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இவற்றோடு நடனம், பாடல், கவிதை, நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

## பக்திச் சபைகளுக்கான கருத்தமர்வு

பருத்தித்துறைப் பங்கின் பக்திச் சபைகளுக்கான கருத்தமர்வு ஒன்று கடந்த 09.10.2009 வெள்ளிக்கிழமை மாலை 6.30 - 8.00 மணி வரை தூய தோமையார் ஆலயத்தின் ''தூய தோமா" அரங்க முன்றலில் இடம் பெற்றது. மறைப் போதகர் இ.ம. ஜெயசீலன் அவர்களின் இறை வணக்கத்துடன் இக் கருத்தமர்வு ஆரம்பமாகியது.

''பங்குத் திருச்சபையும், பங்கின் சபைகளும்" என்ற மையப் பொருளில் யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை கலாநதி போல் றொகான அடிகளார் இங்கு கருத்துரை வழங்கினார்.

''பங்கு" பற்றிய அறிமுகத்துடன் ஆரம்பமான இக் கருத்தமர்வில் பங்கு என்ற அமைப்பு பற்றிய விளக்கங்கள், பங்கின் உட்கட்டமைப்புக்கள் என்ன என்பதைப் பற்றிய தெளிவான விளக்கம் எமக்கு கிடைத்தது. பங்கு என்பது மேலைத் தேசத்தவர்களால் அதாவது போர்த்துக்கேயருடைய ஆட்சியின் போது அவர்களால் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று. ஏறத்தாழ 300 வருடங்களாக இவ் அமைப்பை உள்வாங்கி நாம் செயற்பட்டு வருகிறோம். இப் பங்கின் இயங்கு நிலையில் இருக்கிறது என்பதற்கு அடையாளம் இப் பக்திச் சபைகளே. ஆகவே இவை ஒரு பங்கிற்கு இன்றியமையாதவை. பக்திச் சபைகளை விட பங்கில் இயங்கும் ஒன்றியங்கள், சங்கங்கள், அன்பியங்கள் என்பனவும் பங்கின் உட்கட்டமைப்பிற்குள் அடங்குகின்றன.

''சமூக அளவில் ஆற்றப்படும் அப்போஸ்தலத்துக்கு தெளிவான எடுத்துக்காட்டாக அமைவது பங்கு. ஏனெனில் அது தான் எல்லைக்குள் காணக்கிடக்கும் எல்லா மனித வேறுபாடுகளையும் ஒன்று கூட்டி திருச்சபையின் பொதுமையோடு சேர்க்கின்றது. பங்கின் உட்கட்டமைப்பு" என கூறுகிறது, பொது நிலையினரின் திருத்தூது பணி நூல். எனவே பங்கின் உட்கட்டமைப்புக்களான பக்திச்சபைகள், ஒன்றியங்கள், என்பன பங்கிற்கு முக்கியமானவை. பக்திச் சபைகள் பங்கு குருவின் கரங்களாக பணியாற்றுவதுடன், எல்லோரையும் குருவோடு இணைக்கிறது.

பக்திச் சபைகள் ஆவியின் செயற்பாட்டினால் இயங்க வேண்டும். ஆவியின் செயற்பாடு இல்லாத ஒரு சபை எவ்வாறு இயங்கும் என்பதற்கு உதாரணமாக ''மெய்மையின் ஒரு விடியல்" குறுந்திரைப் படத்தில் இடம் பெற்ற அருட்பணிச் சபையின் கூட்ட நிகழ்வு ஒளி பரப்பப்பட்டது. ஒரு பங்கின் உட்கட்டமைப்புக்கள் எவ்வாறு இயங்க வேண்டும். அவை குருவுடன் இணைந்து பங்கின் வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டும் என அருட்தந்தை அவர்கள் தமது கருத்துரையில் கூறினார்.

இக்கருத்தமர்வு காண் ஒளித்திரை ஊடாக இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறைப் பங்குத் தந்தை அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக்கருத்தமர்வில் பருத்தித்துறைப் பங்கின் பக்திச் சபையினர் கலந்து கொண்டனர்.

அ. நிலா, பருத்தித்துறை.

## மறைக்கல்வித் தின விழா
### (மாதகல் பங்கு)



இறைவிசுவாசத்தை வளர்ப்பது மறைக்கல்வியே என்ற மையக்கருத்தில் மறைக்கல்வி விழாவானது 27.09.09 ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியோடு ஆரம்பமானது. இத்திருப்பலியினைத் தொடர்ந்து நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் யாவும் மாதகல் பங்குத்தந்தை ஆனந்தக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அன்புச் சகோதரிகளின் முதல்வர் அருட்சகோதரி அவர்களும், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி திரு.S. அற்புதராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு குழுப்பாடல், ஓவியப்போட்டி, ஆக்கத் திறன் போன்றன இடம் பெற்றன. இச் செயற்பாடுகள் யாவற்றுக்கும் பங்குத்தந்தையோடு இணைந்து மறையாசிரியர்களும் இச்செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யே. அனுஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏலி, ஏலி, லெமா... (3ம் பக்கத் தொடர்ச்சி)

**கைவிடப்பட்ட திருத்தூதர்கள்**

'இயேசுவே எமக்கு எல்லாம்' என்று வாழ்ந்த திருத்தூதர்கள் சிறையில் அடைக்கப்பட, சாட்டையால் அடிக்கப்பட, பசி பட்டினியோடு வாழ, கற்களால் எறிந்து கொல்லப்பட, கடவுள் அனுமதித்தார் என்பதை மறுக்க முடியுமா?. இவ்வாறு கைவிடப்பட்டவர்கள் அநேகர்..... பேதுறு, யாக்கோப்பு, தோமா, என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவர்கள் செய்த பாவம் என்ன? ஆனால் இறைவன் இவர்களை இத்தகைய துன்பங்களுக்குக் கையளித்தார். திருத்தூதர்கள் எவரையும்விடப் பவுல் பட்ட துன்பங்கள் விபரமாக திருத்தூதர் பணி நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் செய்த பாவம்தான் என்ன?

**கைவிடப்பட்ட மோசே**

மோசே இறைவனோடு நெருக்கமான நண்பனாக உறவுகொண்டாடியவர். அவரது அருளால் ஆட்கொள்ளப்பட்டு முகம் பிரகாசிக்கும அளவுக்கு அன்புறவு நெருக்கமாக இருந்தது. ஆனால் அவரைக் கடவுள் துண்புறவிட்டார். கல்லால் எறியப்பட விட்டார். அருகிருந்து பழகியவர்களால் கேள்விக்கு உள்ளாக்கப்பட விட்டார், தான் ஆவலோடு காத்திருந்த வாக்களிப்பட்ட நாட்டில் காலடி வைக்க விடாது இறக்க வைத்தார் கடவுள். எத்தனை துன்பம் எத்தனை பெரிய ஏமாற்றம்! அவர் செய்த பாவம் என்ன?

**கைவிடப்பட்ட யோசேப்பு**

எவருக்கும் தீமை நினைக்காதவர் பாழ்கிணற்றில் தூக்கி எறியப்படக் கடவுள் அனுமதித்தார். எவரையும் அடிமைப்படுத்தி வாழ விரும்பாத அவர் அடிமையாக விற்கப்பட்டார். கற்போடு வாழ்வதே இறைவனுக்கு விருப்பம் என்று உணர்ந்து வாழ்ந்தவர் எகிப்திய ஆளுநரின் மனைவியால் அநியாயமாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையிலடைக்க இறைவன் கை விரித்தார். இவர் செய்த பாவம் என்ன?

**கைவிடப்பட்ட எரேமியா:**

இறைவனால் தன் பணிக்கென அழைக்கப்பட்டவர். இறைவார்த்தையின் ஆற்றலைத் தன் வாழ்வில் கண்டு அதனை அடக்கி வைக்க இயலாது தவித்தவர். தான் விரும்பாவிட்டாலும் இறைவன் கூறுவதை மக்களுக்குக் கூறப் பணிக்கப்பட்டவர். ஆனால் அத்தகைய பணி செய்த எரேமியாவை இறைவன் துன்பத்துக்குக் கையளித்தார் என்பதுதான் உண்மை. அவரைக் கொல்லப் பலர் சதி செய்தார்கள், கிணற்றில் தூக்கிப் போட்டார்கள், ஏளனம் செய்தார்கள். வேதனையின் உச்சத்திலே தான் பிறந்த நாள் சபிக்கப்படுவதாக என்று கத்தினார் இது தான் உண்மை. இவ்வாறு எத்தனை இறைவாக்கினரை இறைவன் கைவிட்டார். அவர்கள் பாவம் செய்தவர்களா?

**கொடூரமான கொலையுண்ட புனித மரிய கொறற்றி**

தான் சிறுமியாக இருந்தும் கற்போடு வாழ்வது என்று திடசங்கர்ப்பம் பூண்டவள். ஆனால் அலெக்சாண்டர் வன்புணர்ச்சிக்குள்ளாக்க முயன்றபோது போராடினாள். அதற்காக நூற்றுக்கு மேற்பட்ட கத்திக் குத்துகளுக்கு உள்ளாகி இறக்கும் போது இறைவன் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். இவளும் பாவம் செய்தவளா?

**புனித சிலுவை யோவான் (St.John of the Cross)**

அவர்கூறிய கருத்துமட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இறைவனோடுள்ள உறவில் தேநிலவுக் காலம் கழிந்தபின்னர் உள்ள எஞ்சிய காலம் ஆன்மாவின் இருளின் காலம் (dark night of the soul) என்று புனித சிலுவை யோவான் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். இது பாவ இருளின் காலமல்லமாறாக, இறைவனின் அன்பு நெருக்க உணர்வு, ஆறுதல், என்பனவற்றை உணர்வு பூர்வமாக அனுபவிக்க முடியாத ஒரு நிலையாகும் அதாவது நெருக்கமாக அன்பு செய்பவர்களுக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத அனுபவம் இது என்பதையே இப் புனிதர் தெளிவாகக் காட்டுகின்றார்.

**புனித சின்னத் திரேசா**

தன் அன்பின் நெருக்கத்தில், வேதனையின் உச்சத்தில் புனித சிறிய திரேசாள் இயேசுவுக்குக் கூறிய வார்த்தைகள், "இயேசுவே. உம்மை அன்பு செய்கிறவர்களை நீர் இப்படி நடத்துவதால்தான் உமக்கு நண்பர்கள் மிகக் குறைவு." என்பதுதான். இதுதான் ஆன்மீக வாழ்வின் யதார்த்தம்.

**யதார்த்தவாதி இயேசு**

"என்னைப் பின்செல்பவன் தன் அன்றாட சிலுவைகளைச் சுமந்து கொண்டு என்னைப் பின்செல்லட்டும் என்பதுதான் இயேசுவின் யதார்த்த பூர்வமான அழைத்தல். ஆனால் நாம் கடந்து சென்றுவிட்ட தேன்னிலவுக்காகத் தொடர்ந்து ஏங்குவதுதான் நம் துன்பத்தைப் பெருக்குகின்றது, இறைவனைத் தவறாகப் புரிந்துகொள்ள வழியமைக்கின்றது. 'அப்பா என்னைக் கீழே விழவிடமாட்டார். என்னைச் செல்லமாக எப்போதும் அணைத்துக் கொள்வார்' என்று குழந்தைகள்போல எதிர்பார்ப்பது இறைவன் விரும்பும் ஒன்றல்ல.

கடவுள் தான் அன்பு செய்பவர்களோடு எவ்வாறான முறையில் நடந்து கொள்கின்றார் என்பதை வேதாகமம் வெளிப்படுத்தியவாறு நாம் பார்க்க முயல்வதில்லை. ஆனால அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டவற்றை உள்வாங்கிக்கொள்வதே நல்லது. நமது விருப்பத்தின்படி கடவுளைக் காண முயல்வது துன்பங்களைப் பெருக்குமேயன்றிக் குறைக்கப் போவதேயில்லை. வெளிப்படுத்தியவாறு காண்பது நம் வாழ்வின் துன்பங்களை நல்ல முறையில் கையாள்வதற்கும் இறைவனைத் தவறாகப் புரிந்துகொண்டு தவறான உறவு மாற்றம் ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கும் உதவக் கூடியது. பாவம் துன்பத்துக்குக் காரணமாக அமைகின்றது என்பது உண்மை. ஆனால் அவரது விருப்பப்படி வாழும் தன் பிள்ளைகளையும் துன்புற அனுமதிக்கின்றார் அவர்களின் நலனுக்காக, மக்களின் நலனுக்காக இதுதான் உண்மை.

## பங்குகளில் இருந்து... ஆலயத் திருவிழாக் கொண்டாட்டம்



**ஒரு புதிய முயற்சி**

ஐப்பசி 1வது ஞாயிறு அன்று கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத் திருவிழா கொண்டாடப்பட்டது. திருவிழா பங்கு மக்கள் வாழ்வில் அர்த்தமுள்ள தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு புதிய சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருவிழாவிற்கு ஆயத்தமான நவநாட்களும், அவற்றிற்கு ஆயத்தமாக செய்யப்பட்ட அனைத்தும் இறைவார்த்தை நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டு, 30, 60, 100 மடங்கு பலன் கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடேயே (மாற்கு 4:8-9) செய்யப்பட்டன.

**நற்கருணைப்பவனி**

அநேகமான ஆலயங்களில் இறுதி நவநாளில் நடைபெறும் நற்கருணைப்பவனி, 3ம் நவநாளன்றே (ஞாயிறன்று) மாலை ஊரின் வீதியூடாக நடைபெற்றது ஒரு சிறப்பம்சமாக அமைந்தது. ஒவ்வொரு அன்பியத்தினரும் ஒவ்வொரு இடத்தில் நற்கருணை ஆண்டவரை ஆராதிப்பதற்கென பீடமொன்றை குடும்பங்களெல்லாம் மகிழ்ச்சியாகவும், அழகாகவும் ஆயத்தப்படுத்தினர்.

**இறுதி நவநாள் வழிபாடு**

அன்று ஆலயத்தில் எல்லாரும் குடும்பமாகவே அமர்ந்து குடும்ப உணர்வோடு பங்கு பற்றினர். திருப்பலிமுடிவில், நற்கருணை ஆண்டவரை எழுந்தேற்றம் செய்து வழிபாடு மறையுரை நடைபெற்றன. இறுதியில் எமது குடும்பங்களுக்காக ஒன்றாக செபித்தபடன், குடும்பமாகப் பவனியாகச் சென்று மலர்களை நற்கருணை ஆண்டவரிடம் அர்ப்பணித்துச் செபித்தது ஒவ்வொருவரின் உள்ளத்தையும் பக்தியாலும், உவகையாலும் நிரப்பியது. அன்றைய நாள் ஒன்றாக இணைந்து குடும்பங்கள் இருக்கும் அனுபவத்தையும், மனநிறைவையும் பெற்றோம்.

**திருவிழா வழிபாடு**

நாளாந்தம் வழிபாடுகளுக்கு விவிலியத்தைக் கொண்டுவரும் எமக்கு, திருநாள் திருப்பலியில் அன்றைய வாசகங்கள், பாடல்கள் அனைத்தும் அச்சிடப்பட்டு தரப்பட்டதால், எல்லோரும் திருப்பலியில் ஆர்வத்துடன் பங்கு பற்றக்கூடியதாக அமைந்தது. வழமை போல் திருப்பலி முடிவில் திருச்சுருப தேர்ப்பவனியும், ஆசீரும் இடம்பெற்றன.

**ஒக்ரோபர் ஏழு**

அன்று மாலை பங்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து, திருப்பலியில் இணைந்ததோடு, மூன்று வாரங்கள் எம்மோடு தங்கி எம்மை வழிநடத்திய அருள்தந்தை சுந்தருக்கு எனது இதய நன்றிகளையும் தெரிவிக்க வாய்ப்பாக அமைந்தது. இந்த மூன்று வாரங்களும் எமது பங்கிற்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது என்று நாம் துணிவோடு கூறலாம்.

**முடிவு**

மேற் குறிப்பிட்ட திட்டங்களை பங்கு மக்களோடு ஆயத்தம் செய்து, வழிநடத்தியதுடன், எல்லா நிகழ்வுகளையும் பங்குபற்றியது எமது பங்குத்தந்தை அன்ரன் மத்தாஸ் அவர்களே.

இந்நிகழ்ச்சிகள் வழியாக எமது உள்ளங்கள் பண்படுத்தப்பட்டு, இறைவாத்தையை உள்வாங்கிய நாம் 'கனி கொடுத்து என சீடர்களாக விளங்குவதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கின்றது' (யோவான் 15:8) என்று மொழிந்த யேசுவின் வார்த்தைக்கு அமையவா, தொடர்ந்து உள்ளங்களைப் பண்படுத்தி, நீர் பாய்ச்சி, களைகளை அகற்ற வேண்டும் என்பதையும் ஆழமாக உணர்கின்றோம். இவ்விதமே நாங்கள் 'உலகில் சுடர்விடும் ஒளியாக துலங்கலாம், என்பதை உணர்ந்து தொடர்ந்து பயணிக்க தயாராயுள்ளோம்.

வழிபாட்டு ஆண்டிலே பரிசுத்த வாரமே மிகவும் முக்கியமாக இருக்கின்ற போதிலும், ஆலயதிருவிழாக்களுக்கு சிறப்பான முக்கியத்துவம் பொதுவாக வழங்கப்படுகின்றது. எனவே நவநாள் திருவிழாக்கொண்டாட்டங்கள் பயனுள்ள வகையில் அமைய எல்லாரும் புதிய முயற்சிகளைத் தேடி, பரீட்சாத்திக்க வேண்டிய காலமும் நேரமும் வந்துவிட்டன.

**கொ. மேரி கலீஸ்ரா**

## கிறிஸ்துவின் நற்செய்தியை... (2ம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள். இவர்கள் அரியணைக்கும், செம்மறிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தனர். வெண்ணாடை அணிந்திருந்தனர். கையில் குருத்தோலைகளை ஏந்தியிருந்தனர். (தி.வெ 7: 9). புனிதர்களை நன்றியுணர்வுடன் நினைத்து, அவர்களுடன் உள்ளத்தால் 'சமூக உறவு' கொண்டு வாழ திருச்சபை எம்மை அழைத்து நிற்கிறது. இதன் வெளிப்பாடுதான் புனிதர் வணக்கம். ஆனால் அறியாமையாலும், உணர்ச்சி வசத்தாலும் நடைபெறும் மூடநம்பிக்கைகள், துஷ்பிரயோகங்கள் தவிர்க்கபட வேண்டியவை. அதே வேளை எம் மன்றாட்டிலும் பார்க்க புனிதர்களின் பரிந்துரைகள் சக்தி வாய்ந்தவை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இறைப் பிரசன்னம் எப்போதும் முதலிடம் அதேவேளை புனிதர்களை நாம் மதிக்க வேண்டும். இறைவார்த்தை முதலிடம் அத்துடன் புனிதர்களின் வரலாற்றையும் நாம் படிக்க வேண்டும் இறைவன் முதலிடம், அடுத்து புனிதர்களின் நட்புறவும், பரிந்துரைகளும் எமது ஆன்மீக வாழ்வுக்கு இன்றியமையாதவையே. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை வாழ்வாக்கி, கிறிஸ்தவ விழுமியங்களை எமக்கு காட்டியுள்ளார்கள். எனவே நாமும் அவர்கள் பாதையில் சென்று கடவுளுடைய மாட்சிமையைக் காண எமது வாழ்வை புதுப்பிப்போம்.


## நீங்காத நினைவலைகள்



3ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் : யோண்பிலிப் அலோசியஸ்



16ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் : யோண்பிலிப்



6ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் : இயுஸ்ரேனியாஸ் லோறன்ஸ்

அளவற்ற இரக்கம் நிறைந்த தந்தையே!
உம்மில் விசுவாசம் வைத்து வாழ்ந்து
இறந்து போன இவர்களுக்கு
நித்திய சாந்தியை அளித்தருளும்.

இவர்களின் ஆன்மசாந்திக்காக 26.10.2009 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும், திருமுழுக்கு யோவான் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

243, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். T.P. 0212223302 Advt-70/09 - குடும்பத்தினர் -



## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

அந்தோனிப்பிள்ளை பற்றிக்

பிறப்பு 11.02.1938 இறப்பு 20.10.2008

ஆண்டவரே நான் என்றென்றும் போற்றிடுவேன். அவரது புகழை நான் இரவும் பகலும் பாடுவேன். என் ஆன்மா ஆண்டவரில் அகமகிழும் என் உடல் அவரில் இளைப்பாறும்!

அன்புத்தந்தையே இறைவா இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் நீர் தாமே உம் அடியான் அமரர் அந்தோனிப்பிள்ளை பற்றிக் அவரின் பாவத்தளைகளை அறுத்து அமையும் ஒளியும் நிறைந்த இடத்தை அருள்வீராக

இல 1, மவுண்கார்மேல் வீதி, யாழ்ப்பாணம். Advt பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளை.



## 31ம் நாள் நினைவஞ்சலி

திருமதி.
சிசிலியா மரியாம்பிள்ளை

தோற்றம் : 25.03.1912
மறைவு : 23.09.2009

அன்பான அம்மா எம் தந்தை மறுவுலக வாழ்வு நாடிச் சென்றபின் நீங்கள் எம்முடன் இருந்து எம்மை வழிநடத்தியதையிட்டு நாம் மகிழ்ந்திருந்தோம். இப்பொழுது நீங்களும் எம்மை விட்டுப் பிரிந்தது எமக்கு வேதனை தந்தாலும் எம் தந்தையுடன் நீங்களும் மறுவுலக வாழ்வில் இணைந்திருப்பதையிட்டு ஆறுதல் அடைகின்றோம். எம் தந்தையும் நீங்களும் மறுவுலகில் இறைவன் சமூகத்தில் வீற்றிருக்க எந்நாளும் வேண்டுகின்றோம்.

*23.10.2009* புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

52, மருதடி வீதி, யாழ்ப்பாணம். Advt-71/09 பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "துன்பப்படுபவர்கள், விலக்கப்பட்டவர்கள் மத்தியில் சேவை செய்ய உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள்"

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

எனவே தான் தற்காலிகமான வளர்ச்சியில் இருந்து ஆன்மீகத் தேவையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே திருச்சபையின் பணி எல்லையில்லாத மேலான மீட்பை அடைந்து இறையரசை முழுமை அடையச் செய்வதே ஆகும். (நற்செய்தி அறிவிப்பு - 27) எனவே இறை அரசு இவ்வுலகில் முழுமை அடைவதாகக் கருத முடியாது. இது இவ்வுலகிலும், அதன் வரலாற்றிலும் காணப்படுகின்றது. ஆகவேதான் அது நீதிக்கும், சமாதானத்திற்கும், உண்மையான சுதந்திரத்திற்கும, ஒவ்வொரு மனிதனுடைய மாண்புக்கும் மதிப்பளிக்கக் கடமைப்பட்டுள்ளது. எனவே தான் திருச்சபை நற்செய்தி அறிவிக்கும் அன்புப் பணி மூலமாக இவ்வுலகை மாற்றியமைக்க விரும்புகின்றது. அதனால் இவ்வுலகு பிரகாசமடைகின்றது. நாம் வாழ்வதற்கும், பணியாற்றுவதற்கும் தேவையான சக்தியைத் தந்து கடவுளின் ஒளி இவ்வுலகில் செயலாற்றுகின்றது. (கடவுளின் அன்பு - 39) இச்செய்தி மூலமாக எல்லா நிறுவனங்களும், அதன் அங்கத்தவர்களும் இதிலே பங்கு பெறவும், இந்தப் பணியைத் தொடர்ந்து ஆற்றவும் நான் உங்களை அழைத்து நிற்கின்றேன்.

**3. (மக்களுக்கான பணி)**
**மிஸியோ அட்ஜெண்டிஸ்**

எனவே திருச்சபையின் பணி என்பது மனிதவதாரம் எடுத்த இறைமகன் கிறிஸ்து மூலம் கிடைத்த மீட்பை அனைத்து மக்களும் அடைய அழைப்பு விடுப்பது ஆகும்.

எனவே நற்செய்தி அறிவிப்புக்காக நாம் வழங்கிய அர்ப்பணத்தை மீண்டும் புதுப்பித்துக்கொள்வது அவசியமாகின்றது. இது சுதந்திரமான நடைமுறை சகோதரத்துவம், ஒன்றிப்பு, சமாதானம் போன்றவற்றை புளிக்காரமாக மாற்றுகின்றது. (மக்களுக்கான பணி - 8)

திருச்சபையின் முக்கிய பணிகளில் ஒன்று எல்லோருக்கும் மறையை, நற்செய்தியை அறிவிப்பது. இதனை மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன். (நற்செய்தி அறிவிப்பு - 14) இது எமது கடமையும், முக்கிய பணியுமாகும். காரணம் இன்றைய சமூகத்தில் இந்தப் பரந்த, ஆழமான மாற்றம் அவசியமானது. இங்கு உலக மக்களுடைய மீட்பும் மனித வரலாற்றின் முழுமையான நோக்கமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மக்களினத்தின் திருத்தூதரினால் இது ஆரம்பிக்கப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய திருத்தூதர்கள் செல்லும் நகரங்களில் எல்லாம் அவருக்குரிய மக்கள் பலர் இருக்கின்றனர். (திருத்தூதர் பணி 18/10) ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் தொலைவில் உள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது. (திருத்தூதர் பணி 2/39) இறைவனின் முடிவில்லாத மேன்மையை அடையும் வரை திருச்சபை முழுவதும் தன்னை மக்களின் பணிக்காக அர்ப்பணித்துள்ளது. "எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்கு கீழ்ப்படுத்தியுள்ளீர்" அனைத்தையும் மனிதருக்கு அடிபணியச் செய்தார் என்பதால், எதையும் பணியாதிருக்க விட்டுவிடவில்லை எனலாம். எனினும் அனைத்தும் மனிதருக்கு இன்னும் அடிபணியக் காணோம் (எபிரேயர் 2/8)

**4. வேதசாட்சி மரணத்தின் மூலமும் நற்செய்தி அறிவிக்க அழைப்பு**

இன்றைய நாள் மறைபரப்புப் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எனது செபத்தின் மூலமாக இப்பணிக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்தவர்களை நினைவு கூறுகின்றேன். உங்கள் நாட்டுத் திருச்சபையில் மறைபரப்பாளர்களாக இருந்து நற்செய்தி அறிவிப்புக்கு சாட்சியாக விளங்கி கலாபனைகளின் போதும், சமூகப்பாகுபாட்டின் மூலமும் கொடுமைப்படுத்தப்பட்டு, சித்திரவதைக்குட்பட்டு மரித்த ஒவ்வொருவரையும் விசேடவிதமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். சிறிய தொகையினர் இந்த மறைபரப்புப் பணிக்காக கிறிஸ்துவின் "பெயருக்காக" தம் உயிரைத் தியாகம் செய்யவில்லை. எனக்கு முன்பிருந்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் குறிப்பிட்டவை இன்றும் மிகவும் பொருத்தமுடையதாக இருக்கின்றது. யூபிலி விழா நினைவுகள் எமக்கு அதிசயிக்கத்தக்க ஒரு பார்வையை எமக்குத்தருகின்றது. அதாவது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சிறப்பானதும், மேன்மையானதுமான ஒரு சான்று பகரும் சந்தர்ப்பத்தை எமக்கு அளித்துள்ளது. அதாவது துன்பங்கள், வேதனைகள், அச்சுறுத்தல்கள் நிறைந்த சூழல்களில் தமது இரத்தம் சிந்தி நற்செய்தி அறிவிப்புக்காக சான்று பகர்ந்து அந் நற்செய்தியை வாழ்ந்து காட்டுகின்ற ஒரு இறைமக்கள் கூட்டத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (நோவோ மில்லேனியோ ஐநியுட் என்ற அப்போஸ்தலிக்க மடல் 4) கிறிஸ்துவின் பணியில் பங்கெடுப்பது என்பது நற்செய்தியை எடுத்துரைபவர்களின் வாழ்க்கையை மிகவும் ஆழமாக ஆட்கொள்கின்ற ஒன்றாக உள்ளது. இவர்களுக்கு தமது குருவும், முன்னோடியுமான இயேசுக் கிறிஸ்துவுக்கு கிடைக்கப்பெற்ற அதே அளவான இன்பமும், துன்பமும், மேன்மையும் கிடைப்பது உறுதி. "பணியாளர் தலைவரை விடப் பெரியவர் அல்ல என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்திருங்கள், என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள். என்ற வார்த்தையை கடைப்பிடித்திருந்தாலதானே உங்கள் வார்த்தையையும் கடைப்பிடிப்பார்கள்" (யோவான் 15.'.20) கத்தோலிக்க திருச்சபையானது இயேசு காட்டிய சிலுவையின் வழியைப்பின்பற்றி வருகின்றது. திருச்சபையானது தனது சொந்தப்பலத்தினாலோ அல்லது மனித சிந்தனையால் கணிப்பிடப்படும் விழுமியங்களிலோ தங்கியிருக்காமல் பரலோக தந்தையின் விருப்பத்திற்கு அமைந்து கிறிஸ்து பின்பற்றிய கடினமான துன்பம் நிறைந்த பாதையைப்பின்பற்றி வருகின்றது. இந்த வகையில் திருச்சபையானது மனித குலத்திற்கு ஒரு சாட்சியாகவும், பயணம் செய்யும் ஒரு நண்பனாகவும் திகழ்கின்றது. பழமை வாய்ந்த திருச்சபைக்கும் அண்மையில் உருவான இளம் திருச்சபைகளுக்கும் நான் விடுக்கும் அழைப்பு என்னவென்றால் நீங்கள் அனைவரும் உலகத்தின் உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும், அதன் மூலை முடுக்குகளிலும் எப்பொழுதும் பிரகாசிக்கும் ஒளியாக திகழவும் அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை மறக்க வேண்டாம். நற்செய்தி அறிவிப்புப் பணியானது உங்கள் மேய்ப்புப் பணி நிகழ்ச்சி நிரலில் மிக முக்கிய ஒன்றாக இருக்கட்டும். தேசிய மறைபரப்புச் சபைகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். உங்களின் அனைத்துப் பணிகளும் இளம் திருச்சபைகளுக்கு நீங்கள் வழங்கும் சேவைகள், பொருட்கள், உருவாக்கற் பயிற்சிகள், மனவெழுச்சியை ஊக்கப்படுத்தும் செயற்பாடுகள் அனைத்தும் பாராட்டத்தக்கவையே. உங்களுடைய ஆக்க பூர்வமான முயற்சிகளினால் திருச்சபைக்கிடையிலான உறவுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பொதுவான மறைபரப்புச் செயற்பாடுகள், பரஸ்பர புரிந்துணர்வு, ஆதரவு, அன்பளிப்புப் பொருட்களின் பரிமாற்றம் போன்ற பணிகள் மூலமாக நீங்கள் ஆற்றி வரும் உதவிகளை நான் பெரிதும் நன்றியுணர்வுடன் பாராட்டி ஊக்கப்படுத்துகின்றேன்.

**5. முடிவுரை**

மறைபரப்புச் செயற்பாடுகள் எமது திருச் சபையின் உயிர்நாடியாகவும், பலமாகவும் திகழ்கின்றன. (மீட்புப் பணி - 2) எனவே மறைபரப்பும், நற்செய்தி அறிவிப்புப் பணியும் எல்லாவற்றையும் விட மேலானது. அது மட்டுமல்லாது இப்பணியானது தூய ஆவியின் உந்துதலினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பது உண்மையாகும். (மீட்புப் பணி - 26) வெளிநாடுகளில் மறையறிவுப பணியைச் செய்ய மறையறிவிப்பாளர்களை அனுப்பி வைக்கும் உள்ளூர்த்திருச்சபையின் இப்பணியானது ஆண்டவராகிய கிறிஸ்துவின் சான்றுபகரும் உன்னதமான வழிமுறையாகும. எனவே திருச்சபையின் மறைபரப்புப் பணியை மேலும் வளர்த்தெடுக்க, துன்ப வேளையில் திடத்தோடு செயற்பட தூய ஆவியானவரை நோக்கிச் செபிகுமாறு மன்றாடுகின்றேன். இறையரசு உலகெல்லாம் மென்மேலும் பரப்பப்படவும், முக்கியமாக இன்று கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் நாடுகளில் தூய ஆவியானவர் துணையாகவும், பலமாகவும் இருந்து வழி நடத்தும் படியாகவும் மன்றாடுங்கள். அதே வேளை அனைத்து திருச்சபைகளுடனும் நல்லுறவைப் பேணி வளர்க்குமாறும் வேண்டுகின்றேன். நற்செய்தியின் ஒளியில் உங்களது உதவிக் கரங்களை நீட்டி துன்புறும் திருச்சபைகளுக்கு சிறப்பாக வளர்ந்து வரும் இளந்திருச்சபைகளுக்கு பண உதவி, பொருளுதவி வழங்குவதன் மூலமாக மனித குலத்தின் மேம்பாட்டிற்காக உழைக்கும் படியாக வேண்டுகின்றேன். புதிய மறை அறிவிப்புபணியின் நட்சத்திரமாக திகழும் அன்னை மரியாளின் மூலம் உங்கள் அனைத்து மறையறிவுப் பணியும் வழிநடத்தப்படுவதாக. இவர்தான் எமது உலக மீட்பரை உலக மக்களுக்கு ஒளியாக, வழிகாட்டியாக வழங்கியவர். அது மட்டுமல்லாது மீட்பை உலகம் அடைய வழிகாட்டியவர். "ஏனென்றால உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்" (திருத்தூதர் பணி 13/47)

**உங்கள் அனைவருக்கும் எனது ஆசீர் உரித்தாகுக.**

**வத்திக்கான் 29ம் திகதி ஆனிமாதம் 2009.**

---

# சிந்தனைத் தூறல்கள் - 03

## அப்துல் ரகுமானின்

## இது சிறகுகளின் நேரம்

## நடமாடும் 'மம்மி'கள்

.... பெரும்பாலோர் 30 வயதில் தேங்கிப் போய் விடுகிறார்கள். அதாவது "இறந்து போய்" விடுகிறார்கள்

அவர்களை புதைப்பதோ, எரிப்பதோ பிறகு ஏதோ ஒரு வயதில் நடக்கிறது.

அதற்கு காரணம் அவர்கள் இறந்து போனது அப்போதுதான் மற்றவர்களுக்குத் தெரிகிறது.

அவர்கள் 80வது வயதில் புதைக்கப் படுபவர்களாக இருக்கலாம்.

எப்படி புதைக்கும் போது அவர்களுக்கு வயது 80 என்பது கூட தவறுதான்.

உண்மையில் அவர்கள் இறந்தது 30 வயதில். அதுதான் அவர்களுடைய வயது. அவர்களைப் புதைபதற்கு 50 ஆண்டு காலம் பிடித்திருக்கிறது.

ஒரு பிணத்தை பாடம் செய்து வைத்திருந்தால் அது வாழ்வதாகவா அர்த்தம்?

எகிப்தில் மன்னர்கள் இறந்து விட்டால், புதைக்க மாட்டார்கள். உடலைப் பாடம் பண்ணி, பிரமிட்டுக்களில் வைத்து விடுவார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன்னே இறந்து போனவர்களுடைய உடல்கள் கூட இன்னும் இருக்கின்றன.

இவர்கள் எல்லாம் வாழ்வதாகவா அர்த்தம்?

பெரும்பாலான மனிதர்கள் இப்படிப் பாடம் பண்ணிய 'மம்மிகள்' போல்தான் இருக்கிறார்கள்.

மம்மிகளுக்கும் இந்த மனிதர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது.

மம்மிகள் நடமாடுவதில்லை. இவர்கள் நடமாடுகிறார்கள்.

நடமாடுவதாலேயே இவர்கள் வாழ்வதாகச் சொல்ல முடியாது.

சருகுகூடத்தான் காற்றில் புரள்கிறது. இத்தகையவர்களை குறிப்பிடத்தான் தமிழில் 'நடைபிணம்' என்ற சொல்லை உண்டாக்கி வைத்திருக்கிறர்கள்.

உருதுவில் ஒரு கவிதை : காதலிக்கப் பட்டவள் வேறொருவனைத திருமணம் செய்து கொண்டு போய் விடுகிறாள்.

காதலன் பாடுகிறான் : நான் என் பிணத்தை சுமந்து திரியும் பாடை.

உண்மையில் பெரும்பாலோர் செத்துப் போன தங்கள் பிணங்களைச் சுமந்து திரியும் பாடைகளாகவே இருக்கிறார்கள்.

இறப்பதற்கு முன்னாலேயே இறக்காமல் இருப்பது எப்படி?

இடைவிடாமல் உயிர் துடிப்புடன் இயங்க வேண்டும்.

அப்படி இயங்குவதற்கு நமக்கு முன்னால், ஒரு குறிக்கோள் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு குறிக்கோளை அடைந்துவிட்டாய் நின்று விடக்கூடாது. ஓய்வெடுக்கலாம். பயணத்தில் இடையில் தங்கி ஓய்வெடுப்பது போல.

பின் மற்றொரு குறிக்கோளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதை நோக்கி பயணம் செய்ய வேண்டும்.

அப்போதுதான் வாழ்க்கையும் சுவையாக இருக்கும் உண்மையான அர்த்தத்தில் வாழ்வதென்றால் என்ன?

"ஒத்து அறிவான் உயிர் வாழ்வான்" என்று திருவள்ளுவர் அருமையாகச் சொல்கிறார்.

ஒத்து அறிதல் என்றால் என்ன?

மனிதன் தனித்து வாழ முடியாது அவனுக்கு தேவைகள்' அதிகம்.

அவன் தேவைகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் அவனே செய்து கொள்ள முடியாது.

எனவேதான் அவன் சமூகத்தை ஏற்படுத்திக் கொண்டான். சமுகத்தில் ஒவ்வொருவரும் ஒரு தொழிலைச் செய்கிறார்கள் அதனால் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்கிறார்கள் சிலர் விவசாயம் செய்கிறார்கள், சிலர் கடலில் உப்பெடுக்கிறார்கள். அதனால் விவசாயிக்கு உப்புக்கிடைக்கிறது உப்பு எடுப்பவனுக்கு நெல் கிடைக்கிறது இரண்டும் ஒருவனே செய்ய வேண்டுமென்றால் முடியாது ஒருவருக்கொருவர் உதவினால் தான் மனிதர்கள் வாழ, முடியும். இதை அறிவது தான் 'ஒத்து அறிதல்' எனவே மற்றவருக்கு உதவுபவனே உயிர் வாழ்பவன் ஆவான்.

(தூறல் தொடரும்...)

---

**நவம்பர் 1ம் திகதி ஞாயிறு**
**புனிதர் அனைவர் பெருவிழா**

**நவம்பர் 2ம் திகதி திங்கள்**
**இறந்த விசுவாசிகள் அனைவர் நினைவு நாள்**

இறந்த எம் பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், யாருமே நினையாத ஆன்மாக்கள், போரினாலும், குழப்பத்தினாலும் இறந்தவர்கள் அனைவரையும் நினைவு சூர்ந்து அவர்களின் ஆன்ம சாந்திக்காக மன்றாடுவோம்.

---

# ஓர் அழைப்பு

## "உன் பணிக்கு நான் இதோ"

புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலிருந்து அழைப்பு 2010 ம் ஆண்டு நீயும் சேர்ந்து கொள்ள ஆசிக்கின்றாயா?

தரம் 09
தரம் 10
தரம் 11 - O/L
தரம் A/L

A/L பரீட்சையில் சித்தியடைந்த பின்பு அடுத்தது என்ன என்று யோசிக்கும் இளைஞனே நீயும் தொடர்பு கொள்ளலாம்.

இன்றே உங்கள் பங்குத் தந்தையை தொடர்பு கொண்டு இயேசுவின் அழைப்புக்கு நீ ஆம் என்று பதில் சொல் முடியும்.

அதிபர்
புனித. மடுத்தீனார் குருமடம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் [illegible] அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org